தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**கனமழை: நாகப்பட்டினத்தில் பள்ளிகளுக்கு விடுமுறை**

நாகப்பட்டினத்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. நேற்று கனமழை பெய்த காரணத்தால் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து இன்று 2வது நாளாக கன மழை பெய்து வருவதையொட்டி பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது இது குறித்த அறிவிப்பை மாவட்ட ஆட்சியிஅர் இன்று வெளியிட்டார்

**மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு**



காவிரி டெல்டா மாவட்டங்களில் தற்போது பரவலாக மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு நொடிக்கு 3 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, காவிரி டெல்டா மாவட்டங்களில் இரு நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

இதனால், டெல்டா பாசனப் பகுதிகளில் பாசனத்துக்கான நீர் தேவை குறைந்துள்ளது. இதன் காரணமாக, மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு புதன்கிழமை காலை நொடிக்கு 3 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 85.54 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 3,577 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. நீர் இருப்பு 46.63. டி.எம்.சி.யாக இருந்தது.

**உணவுப் பாதுகாப்பு விவகாரத்தில் சமரசத்துக்கு இடமில்லை: இந்தியா**



உணவுப் பாதுகாப்பு விவகாரத்தில் சமரசம் செய்துகொள்ளும் பேச்சுக்கே இடமில்லை என இந்திய தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இந்தோனேசியாவின் பாலி தீவில், உலக வர்த்தக அமைப்பின் (டபிள்யூ.டி.ஓ) உறுப்பு நாடுகளைச் சேர்ந்த தொழில் வர்த்தகத்துறை அமைச்சர்களின் 4 நாள் மாநாடு செவ்வாய்க்கிழமை தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த மாநாட்டில், இந்திய தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா புதன்கிழமை பேசியதாவது:

கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமாக விவசாயம் விளங்கிவருகிறது. விவசாயிகளின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். உலகம் முழுவதும் உள்ள 400 கோடி பேருக்கு உணவுப் பாதுகாப்பு அளிக்கவேண்டியது அவசியம்.

இந்தியாவைப் பொருத்தவரை உணவுப் பாதுகாப்பு விவகாரத்தில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்தியர்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான உணவு தானிய பொது இருப்பு இருந்தாக வேண்டும்.

டபுள்யூ.டி.ஓ.வின் காலாவதியான சட்டதிட்டங்களில் மாற்றம் கொண்டு வரவேண்டியது அவசியம்.

கோடிக்கணக்கானவர்களின் பசித் துயரைப் போக்குவதில் நமக்குள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் வகையிலான வர்த்தக ஒப்பந்தத்தை, ஒருமித்த உணர்வுடன் நாம் எட்டவேண்டும் என்றார் ஆனந்த் சர்மா.

இந்தியாவில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 82 கோடி பேருக்கு மாதந்தோறும் கிலோ ஒன்றுக்கு ரூ.1 முதல் 3 வரையிலான விலையில் உணவு தானியங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக ஆண்டொன்றுக்கு 6.2 கோடி டன் உணவு தானியம் பொது விநியோக முறை மூலம் வழங்கப்படவேண்டியுள்ளது.

எனினும், டபிள்யூ.டி.ஓ.வின் விவசாயம் தொடர்பான வரைவு ஒப்பந்தத்தில் 1986-88-ஆம் ஆண்டின் தானிய விலைகளை அடிப்படையாகக் கொண்டே விவசாய மானிய வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தியா, சீனா, இந்தோனேசியா உள்ளிட்ட 46 வளரும் நாடுகளைக் கொண்ட "ஜி-33' அமைப்பு, இந்த மாநாட்டில் பொது விநியோக முறை மூலம் ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் உணவு தானியங்களை வழங்க வழி செய்யும் வகையில், டபிள்யூ.டி.ஒ.வின் அந்த வரைவு ஒப்பந்தத்தில் தேவையான திருத்தம் கொண்டுவர முயன்று வருவது குறிப்பிடத்தக்கது.

**காய்கனி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் இடம்: ஆட்சியர் ஆய்வு**

ஆற்காடு நகராட்சியில் காய்கனி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் இடத்தை மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் புதன்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கோவையில் உள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்தின் உதவிப் பேராசிரியை செல்வராணி, பள்ளிப்பாளையம் நகராட்சி ஆணையாளர் முத்துவெங்கடேசன் ஆகியோருடன் திடக்கழிவு மேலாண்மை குறித்த பட்டப் படிப்பு பயில்வோர் உள்ளிட்ட 25 பேர் வந்திருந்தனர். ஆற்காடு எம்.எல்.ஏ. வி.கே.ஆர்.சீனிவாசன், நகராட்சித் தலைவர் ஆர்.புருஷோத்தமன், நகராட்சிகளின் மண்டல இயக்குநர் குபேந்திரன், ஆணையாளர் செ.பாரிஜாதம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

**வரத்து அதிகரிப்பு: தக்காளி விலை பாதியாகக் குறைந்தது**



சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால் விலை பாதியாகக் குறைந்தது.

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு உடுமலைப்பேட்டை, திண்டுக்கல், பெங்களூர், ஆந்திரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து லாரிகள் மூலம் தினமும் விற்பனைக்காக தக்காளி கொண்டுவரப்படுகின்றது.

தக்காளி அதிகளவு சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் உற்பத்தி குறைந்ததால் கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அதிகபட்சமாக ஒரு கிலோ ரூ.55 வரை விற்பனையானது. வரத்து சற்று அதிகரித்ததால் நவம்பர் மாத இறுதியில் கிலோ ரூ.40-க்கு விற்கப்பட்டது.

இந்த நிலையில் கோயம்பேடு மார்க்கெட்டில் புதன்கிழமை முதல் தக்காளி ஒரு கிலோ ரூ.18 முதல் ரூ.20 வரை விற்பனையானது. இதே போல் தியாகராய நகர், நுங்கம்பாக்கம், எழும்பூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சில்லரை விற்பனைக் கடைகளிலும் தக்காளி ஒரு கிலோ ரூ.20-க்கு விற்பனை செய்யப்பட்டது.

விலை குறைவு குறித்து கோயம்பேடு காய்கறி மார்க்கெட் சங்க ஆலோசகர் சௌந்தரராஜன் கூறியது:

தக்காளி உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் போதிய மழைப்பொழிவு இல்லாததால் விளைச்சல் குறைவாக இருந்தது. இதனால் விலை அதிகரித்தது. தற்போது உற்பத்தி அதிகரித்ததால் மார்க்கெட்டுக்கு கொண்டுவரப்படும் தக்காளி வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் வரை 35 லாரிகளில் 450 முதல் 600 டன் வரை தக்காளி கொண்டுவரப்பட்டது. வரத்து அதிகரித்ததால் தற்போது 60 லாரிகளில் 850 டன் வரை தக்காளி கொண்டுவரப்படுகிறது.

ரூ.40-க்கு விற்ற தக்காளி பாதியாகக் குறைந்து ரூ.20-க்கு விற்பனையாவதால் பொதுமக்களும் ஹோட்டல் உரிமையாளர்களும் வழக்கத்தை விட அதிகளவு தக்காளியை வாங்கிச் செல்கின்றனர் என்றார்.

**கரும்புக்கு உரிய ஆதரவு விலை நிர்ணயிக்காவிடில் டிசம்பர் 9 முதல் போராட்டம் தொடரும்**

கர்நாடகத்தில் கரும்புக்கு உரிய ஆதரவு விலை நிர்ணயிக்காவிடில், வருகிற 9-ஆம் தேதி முதல் மாநிலம் தழுவிய போராட்டம் நடைபெறும் என்று, கர்நாடக மாநில விவசாயிகள் சங்கத் தலைவர் கோடிஹள்ளி சந்திரசேகர் தெரிவித்தார்.

இதுகுறித்து பெல்காமில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கர்நாடக அரசு உத்தரவிட்ட பிறகும், கரும்பை பிழிவதற்கு சர்க்கரை ஆலைகள் மறுத்து வருகின்றன.

முதல்வர் சித்தராமையா கேட்டுக் கொண்டதற்கு இணங்க, எங்கள் போராட்டத்தைக் கைவிட்டோம்.

வருகிற 6-ஆம் தேதி தில்லியில் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் சரத் பவார் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கரும்புக்கு உரிய ஆதரவு விலை நிர்ணயிப்பது வழங்குவது குறித்து விவாதிக்கப்படும் என்று முதல்வர் சித்தராமையா உறுதி அளித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, புதன்கிழமை பெல்காமில் நடத்துவதாக திட்டமிட்டிருந்த மாநாட்டையும் ரத்து செய்தோம்.

மேலும், கரும்புக்கு டன்னுக்கு ஆதரவு விலையாக சர்க்கரை ஆலைகள் ரூ. 2,400-ஐயும், அரசு ரூ. 250-ஐயும் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது ஏற்புடையது அல்ல.

எனவே, கரும்புக்கு உரிய ஆதரவு விலை நிர்ணயிக்காவிடில், வருகிற 9-ஆம் தேதி முதல் மாநிலம் தழுவிய போராட்டத்தை மீண்டும் தொடங்குவோம் என்றார் அவர்.

**குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார்**

கலசப்பாக்கத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

கலசப்பாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு மாவட்ட ஆதிதிராவிட நலத்துறை அலுவலர் யுவராஜ் தலைமை வகித்தார். வட்டாட்சியர் பா.கோபால் வரவேற்றார். சமூக நலத்துறை வட்டாட்சியர் ராஜலட்சுமி, வட்ட வேளாண்மைத் துறை துணை இயக்குநர் சுந்தரம், வட்ட வழங்கல் அலுவலர் சேகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கருணாநிதி, பாலகிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு அவர்களது குறைகளை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறினர்.

விவசாய நிலங்களுக்கு வந்து விவசாயிகள் எவ்வாறு விவசாயம் செய்கிறார்கள் என்று பார்வையிடவோ, விவசாயம் சம்பந்தமாக ஆலோசனை கூறவோ

வேளாண்மைத் துறை அலுவலர்கள் கிராமங்களுக்கு வருவதில்லை என்று குற்றம் சாட்டினர்.

தமிழக அரசு நவம்பர் 19 ஆம் தேதி அனைத்து கிராமங்களிலும் விவசாயிகளுக்கு கோமாரி நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடத்த உத்தரவிட்டிருந்தது. ஆனால் கிராமசபைக் கூட்டம் பெயரளவில் நடந்ததாக புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து மாவட்ட ஆதிதிராவிட நலத்துறை அதிகாரி பேசுகையில், விவசாயிகள் கூறிய அனைத்துப் புகார்களும் மாவட்ட ஆட்சியரின் மூலமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்த கூட்டத்தில் துறை அதிகாரிகள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

**பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி ஆய்வு**

: செங்கம் ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகளில் பண்ணைக் குட்டை அமைக்கும் பணியை வட்டார வளர்ச்சி அலுவலர் மு.பிச்சாண்டி ஆய்வு செய்தார்.

செங்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட கண்ணக்குருக்கை, மேல்பள்ளிப்பட்டு, காயம்பட்டு ஆகிய கிராம ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் பண்ணை குட்டைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனை வட்டார வளர்ச்சி அலுவலர் மு.பிச்சாண்டி நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார். அப்போது இந்தப் பணிகளை விரைந்து முடிக்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஊராட்சி செயலாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

**உணவு, மருத்துவ தாவரங்களைப் பாதுகாப்பது அவசியம்**

உணவு மற்றும் மருத்துவ தாவரங்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமென, கோவை மண்டல வனப் பாதுகாவலர் வி.டி.கந்தசாமி குறிப்பிட்டார்.

உதகை ஜே.எஸ்.எஸ். பார்மசி கல்லூரியில் தேசிய பார்மசி வார விழா புதன்கிழமை தொடங்கியது. டாக்டர் சதீஷ்குமார் வரவேற்றார்.

இதில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற வி.டி.கந்தசாமி பேசியது:

மருந்துக்காகவும், உணவுக்காகவும் உள்ள தாவரங்களையும், மருத்துவக் குணம் வாய்ந்த மூலிகைத் தாவரங்களையும் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

தாவரங்களை நம்பியே உணவு உற்பத்தி உள்ளது. நீலகிரி உயிர்ச்சூழல் மண்டலத்தில் உள்ள தாவரங்களைப் பாதுகாக்க வேண்டும். பழங்காலத்திலிருந்தே தாவரங்கள் மருத்துவ பயன்பாட்டிற்கு முக்கியக் காரணியாக அமைந்துள்ளன. ஆனால், தற்போது இவற்றின் முக்கியத்துவம் தெரியாமல் அழித்துவிட்டதாலும், மருத்துவப் பயன்பாட்டிற்கான தாவரங்கள் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன. அதேபோல, வன விலங்குகளும் இத்தகைய தாவரங்களை நம்பியே உள்ளன.

சித்த மருத்துவத்தில் இத்தகைய தாவரங்கள் முக்கிய இடம்பிடித்துள்ளன. 40 வயதிற்கு மேற்பட்டோருக்கு சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் உள்ளிட்ட பிரச்னைகள் இருந்தாலும் இயற்கையாக கிடைக்கும் மூலிகைத் தாவரங்களைக் கொண்டு அவற்றை குணப்படுத்த முடியும். இதற்காக புதிய தொழில்நுட்பத்தின் மூலமாக மருந்துகளை கண்டறிய வேண்டும். உதகையில் தொட்டபெட்டா பகுதியிலுள்ள வனத் துறை மூலிகைப் பூங்காவுக்குச் சென்று மூலிகைத் தாவரங்கள் குறித்த ஆராய்ச்சிகளையும், அறிவையும் மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நாட்டிலேயே முக்கியமான மலைப் பகுதியாக மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி விளங்குகிறது. இங்கு அனைத்து வகையான தாவரங்களும், விலங்குகளும் உள்ளன. இந்தியாவில் தற்போது சுமார் 4,000 புலிகள் இருப்பதாக கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. இதில், முதுமலை, பந்திப்பூர், வயநாடு உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கிய நீலகிரி உயிர்ச்சூழல் மண்டலப் பகுதிகளில் மட்டும் 250 புலிகள் இருக்கலாம் என தெரியவந்துள்ளது. இப் பகுதிகளில்

வேட்டையில் ஈடுபடுபவர்களைத் தடுக்கும் வகையில் ரகசிய கண்காணிப்புக் கேமரா உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

ஆஸ்திரேலியாவின் டா டிரோப் பல்கலைக்கழக வேளாண்மைத் துறைத் தலைவர் மார்க்கண்டேய ஜாய்ஸ், ஹெலி நிலி மருந்து நிறுவன தலைமை விற்பனை அலுவலர் சக்தி வடிவேல், ஜே.எஸ்.எஸ். பார்மசி கல்லூரி துணை முதல்வர் டாக்டர் இளங்கோ மற்றும் டாக்டர் துரைசாமி உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். டாக்டர் பொன்னுசங்கர் நன்றி கூறினார்.

**திண்டல்மலை வேளாண் கூட்டுறவுச் சங்கத்தில் மாவட்ட மின் ஆளுமைத் திட்டம் தொடக்கம்**

ஈரோடு அருகே திண்டலில் உள்ள திண்டல்மலை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், மாவட்ட மின் ஆளுமைத் திட்டம் புதன்கிழமை தொடங்கப்பட்டது.

இத் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தொடங்கி வைத்துப் பேசியது: மாவட்ட மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் சாதி, இருப்பிட, வருமானம் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோருக்கான சான்றிதழ், முதல் பட்டதாரிச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

முதற்கட்டமாக இத் திட்டம் ஈரோடு கிழக்கு, மேற்கு, வடக்கு குறு வட்டங்களில் செயல்படுத்தப்படும். இக் குறுவட்டங்களில் உள்ள 32 கிராமங்களைச் சார்ந்தவர்கள் இத் திட்டத்தின் கீழ் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம். காலிங்கராயன்பாளையம், நசியனூர், சித்தோடு, வீரப்பன்சத்திரம், பி.பெ.அக்ரஹாரம், காசிபாளையம், திண்டல்மலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் மின் ஆளுமைத் திட்ட மையம் செயல்படும்.

இப் பகுதி பொது மக்கள் சான்றிதழ்கள் கேட்டு உரிய ஆவணங்களுடன் இம் மையங்களில் விண்ணப்பிக்கலாம். கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்றார். இத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு சாதி, வருமான, இருப்பிடச் சான்றிதழ்களை ஆட்சியர் சண்முகம் வழங்கினார்.

ஈரோடு வருவாய்க் கோட்டாட்சியர் வை.குணசேகரன், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) பரிதாபானு, சந்தோஷினி சுந்தரி, ஈரோடு சரக துணைப் பதிவாளர் மீனா அருள், திண்டல்மலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் கே.ஆர்.பழனிசாமி, செயலாளர் (பொ) எஸ்.பி.பாலசுப்ரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**அன்னூர் பகுதியில் 22 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி**

அன்னூர் பகுதியில் 22 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

அன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள 22 ஆயிரத்து 26 கால்நடைகளுக்கு கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் முத்துகோபாலகிருஷ்ணன் அறிவுறுத்தலின் பேரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, அன்னூர் கால்நடை மருத்துவர் வெ.தங்கவேலு கூறியது: அன்னூர் பகுதியில் கோமாரி நோய் தடுப்பிற்காக இதுவரை தொடர்ந்து இருபதுக்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலமாக 22,026 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தொடர்ந்து கால்நடைகளைக் கண்காணித்து வருகிறோம்.

நோய் பற்றிய அறிகுறி தெரிந்தால் உடனடியாக அந்தக் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்து வருகிறாம். மேலும் கால்நடை வளர்ப்போருக்கு கோமாரி நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். கால்நடைகள் வளர்க்கப்படும் இடங்களில் அன்னூர் பேரூராட்சி சார்பில் சுண்ணாம்புதூள், பிளீச்சிங் பவுடர் ஆகியன தெளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் கால்நடைத் துறையும், கால்நடை வளர்ப்போரும், பேரூராட்சி நிர்வாகமும் விரைந்து நடவடிக்கை எடுத்ததால், அன்னூர் பகுதியில் கோமாரி நோய் பரவுவது தடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இது வரை கோமாரி நோய் தாக்கியதில் கால்நடைகள் உயிரிழக்கவில்லை.

**"மஞ்சள், வேம்பு நேரடி உபயோகம் நோய் எதிர்ப்பு சக்தி தருகிறது'**

மஞ்சள், வேம்பு நேரடி உபயோகம், உடலிலுள்ள கெட்ட கொழுப்புகளை நீக்குவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியையும் தருவதாக, அமெரிக்க பல்கலைக்கழக உதவி பேராசிரியர் ராஜா சிவமணி தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் மூலக்கூறுவியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் சார்பில் "வேளாண்மைத் தாவரங்களைக் கொண்டு சரும நலத்தைக் காப்பது எப்படி?' என்ற தலைப்பில் சிறப்புரை புதன்கிழமை நடைபெற்றது.

இதில், அமெரிக்க வாழ் இந்தியரும், கலிபோர்னியா யூசி டேவிஸ் பல்கலைக்கழகத்தின் தோல் பராமரிப்பு வல்லுநருமான ராஜா சிவமணி பேசியது:

இயற்கையான தாவரங்களைக் கொண்டு நம் முன்னோர் பரிந்துரைப்பது போல, நமது வெளிப்புறத் தோலினை சிறந்த முறையில் பராமரிக்கலாம். மஞ்சள் மற்றும் வேம்பினை காலங்காலமாக குளியலின் போது உபயோகிப்பதன் மூலம், அந்த மூலிகைகளில் இருந்து நோய் தாக்காத சூழல் ஏற்பட்டு சரும நலன் பாதுகாக்கப்படுகிறது.

மாறாக அந்த மூலிகைப் பொருட்களில் இருந்து எடுக்கப்படும் வேதிப்பொருட்களான குர்குமின், அசாடேரக்டின் ஆகியவற்றின் உபயோகத்தால் அவ்வளவான நன்மை சருமத்திற்கு கிடைப்பதில்லை. மஞ்சள் மற்றும் வேம்பின் நேரடி உபயோகம் நம் உடலிலுள்ள கெட்ட மற்றும் தேவையற்ற கொழுப்புகளை நீக்குவதுடன் நோய் எதிர்ப்பு சக்தியையும் தருகிறது.

ஆயுர்வேதத்திலும் மலைவாழ் மக்கள் கையாளும் மருத்துவத்திலும் உள்ள அனுகூலங்கள் விஞ்ஞான ரீதியாகக் கண்டறியப்பட்டு, அதை ஊக்கப்படுத்தும் வகையில் யூசி டேவிஸ் பல்கலைக்கழகமும், வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்வது குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

குழந்தைகளுக்கு ஏற்படும் ஊட்டச்சத்து பற்றாக்குறையை தாவர மற்றும் வேளாண்மைப் பயிர்களைக் கொண்டு சரிசமமான சத்துணவுப் பொருட்களை

ஏற்படுத்துவது குறித்து விரிவான ஆய்வகப் பரிசோதனை செய்யப்பட உள்ளது என்றார்.

பல்கலைக்கழகத்தின் பயிர் மூலக்கூறுவியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் ஆர்.சந்திரபாபு, சென்னை லயோலா கல்லூரியின் பூச்சியியல் ஆராய்ச்சி நிலைய சிறப்பு ஆராய்ச்சியாளர் வி.சேஷாத்ரி உள்பட பலர் பங்கேற்றனர்

**கோமாரி நோய்: 5 மருத்துவக் குழு அமைப்பு**

காஞ்சிபுரம் அருகே கொட்டவாக்கம் கிராமத்தில், கோமாரி நோய் தாக்குதலைத் தொடர்ந்து அக்கிராமத்தில் கால்நடைகளை ஆய்வு செய்ய 5 மருத்துவக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் அருகே கொட்டவாக்கம் கிராமத்தில் கோமாரி நோய் தாக்குதலுக்கு உள்பட்ட பசு, எருமை மாடுகள் இறந்துவிட்டதாகவும், உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் திங்கள்கிழமை ஆட்சியரிடம் மனு அளித்தனர்.இதைத் தொடர்ந்து ஆட்சியர் உத்தரவுபடி அக்கிராமத்தில் உள்ள கால்நடைகளை ஆய்வு செய்ய ஐந்து மருத்துவக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் ஒரு கால்நடை மருத்துவர், ஒரு கால்நடை உதவியாளர் கொண்ட  இருவர் இடம் பெற்றுள்ளனர்.இக்குழுவினர் காஞ்சிபுரத்தை அடுத்த, புள்ளலூர், கொட்டவாக்கம் ஆகிய பகுதிகளில், கோமாரி நோய் தாக்குதலால், பசு மற்றும் எருமை மாடுகள் இறந்தது குறித்து ஆய்வு செய்யும்.

மேலும் கிராமத்தில் மற்ற கால்நடைகளுக்கு நோய் பரவாமல் இருக்கும் வகையில் நோய்த்  தடுப்புப் பணியிலும் ஈடுபடுவர்.

**விளை நிலங்களில் எரிவாயு குழாய் பதிப்பு திட்டத்தைக் கைவிட வலியுறுத்தல்**

விளை நிலங்களில் எரிவாயு குழாய் பதிப்பு திட்டத்தைக் கைவிட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் அந்தக் கட்சியின் மாவட்டக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

மாவட்டச் செயலர் ந.நஞ்சப்பன் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர் பி.சேதுராமன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

இந்தக் கூட்டத்தில், விளை நிலங்களில் கெயில் நிறுவனத்தின் எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டும். மேலும், இந்தத் திட்டம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ள தமிழக அரசின் நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்துக் கொள்வது.

பள்ளி மாணவர்களுக்கு அரையாண்டுத் தேர்வு தொடங்க உள்ளதால், காலை, மாலை நேரங்களில் நடைமுறையில் உள்ள மின் தடையை நீக்க வேண்டும்.

தருமபுரி மாவட்டத்தில் கோமாரி நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்த மருத்துவ முகாம்கள் நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட துணைச் செயலர்கள் எஸ்.தேவராஜன், ஜெ.பிரதாபன், மாவட்ட பொருளாளர் பி.மணி உள்ளிட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**சிறுதானிய சாகுபடி: மாவட்ட ஆட்சியர் ஆய்வு**

புதுக்கோட்டையை அடுத்த முத்துக்காடு கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள சிறுதானியப் பயிரை மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன்

புதன்கிழமை நேரில் பார்வையிட்டார்.

மறைந்துபோன தானியங்களான குதிரைவாலி, வரகு, கேழ்வரகு, சோளம், கம்பு, சாமை, தினை போன்ற சிறுதானியங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பயிரிடப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முத்துக்காடு கிராமத்தில் விவசாயி அப்பாவுபாலாண்டார் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள சிறுதானியங்களில் ஒன்றான குதிரைவாலி பயிரை ஆட்சியர் நேரில் பார்வையிட்டார்.

குறைவான மழையிலேயே மானாவாரி நிலத்தில் சிறப்பாக 90 நாட்களில் வளரக்கூடிய பயிர் குதிரைவாலி.

மேலும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது 350 மி.மீ தண்ணீர் போதுமானது, பூச்சி நோய் தாக்குதல் இல்லாதது என்றும், ஒரு மழை பெய்த பின், 45 நாள்கள் வரை மழை இல்லாவிட்டாலும், தாக்குப் பிடித்து வளரும் தன்மை கொண்டது.

இதற்கு மண்ணுக்கும், இயற்கை சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் எந்த ரசாயண உரமும், பூச்சி மருந்தும் தேவையில்லை.

ஒரு ஏக்கரில் 800 கிலோ முதல் 1 டன் வரை மகசூல் கிடைக்கும். ஒரு கிலோ குதிரைவாலி தானியம் தற்போது சந்தையில் ரூ. 15

முதல் ரூ. 20 வரை விலை போகின்றது.

உழவு, விதை, அறுவடை எனப் பார்த்தால் ஒரு ஏக்கர் குதிரைவாலி பயிரிடுவதற்கு மொத்தம் ரூ. 2500 செலவாகும். 90 நாட்களில் மானாவாரி நிலத்தில் நிகர லாபமாக ரூ. 11 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை பெறமுடியும் எனவும், தனது 3 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள குதிரைவாலியை அரசாங்க (அடங்கல்) அ பதிவேட்டில் ஏற்றி விட்டனர். அதே போல் மற்ற விவசாய நிலங்களில் உள்ள சிறுதானியங்களையும் பதிவேட்டில் ஏற்ற வேண்டும் என ஆட்சியரிடம் வலியுறுத்தினார் விவசாயி அப்பாவுபாலாண்டார்.

அன்னவாசல், அரிமளம், அண்டக்குளம் பகுதிகளில் உள்ள 150 விவசாயிகள் மத்தியில் குதிரைவாலி உள்ளிட்ட சிறுதானிய விதைகள் கொடுக்கப்பட்டு

பயிரிடப்பட்டுள்ளதாக ஆட்சியரிடம் தெரிவித்தார் ரோஸ் தொண்டு நிறுவன நிர்வாகி ஆதப்பன்.

**கால்நடைகள் இறப்புக்கு உரிய நிவாரணம் தேவை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பேராவூரணி சட்டப்பேரவைத் தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் எஸ்.ஏ. தெஷ்ணாமூர்த்தி தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு:

தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரும்பாலான கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஏற்பட்டு ஏராளமானவை இறந்துவிட்டன. எனவே, கால்நடைகளுக்கு போர்க்கால

அடிப்படையில் சிகிச்சை அளிக்க உத்தரவிட வேண்டும். விவசாயம் பொய்த்துப்போன நிலையில் கால்நடைகளை நம்பியிருந்த விவசாயிகள் இழப்பு ஏற்பட்டு மிகுந்த சிரமத்தில் உள்ளதால், அவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும்.

**வெளி மாவட்ட மீனவர்கள் விவரங்களை பதிவு செய்ய அறிவுறுத்தல்**

கோடியக்கரையில் தங்கி மீன்பிடித் தொழில் செய்யும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விவரங்களை பதிவு செய்ய வேண்டும் என கடலோரக் பாதுகாப்பு குழுமம் சார்பில் புதன்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த கோடியக்கரை படகுதுறை பகுதியில் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் கடல் சீற்றம் பலநேரங்களில் குறைவாக இருக்கும்.

இந்த பருவத்தில் இங்கு வந்து தங்கி படகுகளை பாதுகாப்பாக நிறுத்தவும், மீன்பிடித் தொழில் செய்யவும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் வருகின்றனர்.இதனிடையே, கோடியக்கரை வழியாக தங்கம் உள்ளிட்ட பொருள்களை கடத்துவது தொடர்பாக குற்றவாளிகள் பிடிபட்டு வரும் நிலையில்,கடந்த நவ. 30-ம் தேதி கடற்கரையில் ஒதுங்கிய பாலித்தீன் பையில் வெளிநாட்டில் தயாராகும் ஜிப்புகள் இருந்ததும் தெரிய வந்தது. இதனால் மீண்டும் கடலோரப் பாதுகாப்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அன்னிய நாட்டவர், கடத்தல், தீவிரவாதம் போன்ற குற்றங்களில் ஈடுபடுவோரை கண்டறிய ஏதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதையடுத்து, கோடியக்கரையில் கடலோரக் பாதுகாப்பு குழுமம் சார்பில் மீனவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் குழுமத்தின் காவல் துணைக் கண்காணிப்பாளர் குணசேகரன் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

இங்கு தங்கி மீன்பிடிக்கும் வெளிமாவட்ட மீனவர்கள் தங்களது விவரங்களை பதிவு செய்யவும், அன்னியர்கள் நடமாட்டம் இருந்தால் தெரிவிக்கவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### தொடர் மழை : சம்பா பயிர்கள் சாய்ந்தன

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் வயல்களில் நீர்த்தேங்கியுள்ளதால், வளர்ந்த பயிர்கள் நீரில் சாய்ந்து கிடக்கின்றன.

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழைப் பெய்து வருகிறது. தொடர் மழை காரணமாக திருவாரூர் மாவட்டத்தில் தாழ்வான பகுதிகள் மற்றும் நீர்நிலைகளில் தண்ணீர் குளம் போல் தேங்கியுள்ளது.

மேடான பகுதிகளில் தேங்கியுள்ள நீர் அருகிலுள்ள சிறிய மற்றும் பெரிய கால் வாய்களில் வடிந்து கொண்டிருக்கிறது. வடிய வாய்ப்பு இல்லாத பகுதிகளில் நீர்த்தேங்கி இருக்கிறது. இதனால் சில இடங்களில் சம்பா பயிர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. திருவாரூர் அருகே புலிவலம், கீழகூத்தங்குடி, பவித்திரமாணிக்கம் உள்ளிட்ட பகுதி களில் முன்கூட்டியே சாகுபடி செய்து அதிகம் வளர்ந்த நிலையில் சம்பா பயிர்கள் தண்ணீரில் சாய்ந்து கிடக்கின்றன. இந்த மழை சம்பா பயிருக்கு பயனுள்ள வகையில் இருந்தாலும், முழு விளைச்சலைக் கண்ட சாகுபடி வயல்களுக்கும், பூத்து இருக்கும் வயல்களுக்கும் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

இதுகுறித்து கீழகூத்தங்குடி விவசாயி பக்கிரிசாமி கூறியது:

கீழகூத்தங்குடி பகுதியில் 7029 என்ற சம்பா ரகம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது சுமார் முக்கால் மீட்டர் உயரம் வளர்ந்து நெல்மணிக்கு தயாராகும் நிலையில் பூக்கள் பூத்துள்ளன. மழை நீடித்தால் இப்பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும். வளர்ந்த பயிர்கள் நீரில் சாய்ந்து மூழ்கியுள்ளன.

கடந்த ஆண்டு சம்பா மற்றும் குறுவை முற்றிலும் பாதிக்கப்பட்டு விவசாயிகள், தற் போதைய சம்பா சாகுபடி செய்ய முடியாமல் மிகவும் துன்பப்படுகின்றனர். எனவே கடந்த ஆண்டு வழங்க வேண்டிய பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை வழங்கினால் உதவியாக இருக்கும் என்றார் அவர்.

முத்துப்பேட்டையில் 69 மில்லி மீட்டர் மழை:

புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக முத்துப்பேட்டையில் 69 மில்லி மீட்டர் மழைப் பதிவாகியுள்ளது. மாவட்டத்தி ல் பிற பகுதிகளில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில்: திருவாரூர் - 61.1, திருத்துறைப்பூண்டி - 53.4, மன்னார்குடி - 34, நன்னிலம் - 20.4, பாண்டவையாறு தலைப்பு - 18.8, நீடாமங்கலம் - 17.6, வலங்கைமான் - 17.1, குடவாசல் - 10.2 என்ற அளவில் பதிவாகியுள்ளது.

**நெல்லை கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு ரூ.43 கோடியில் புதிய கட்டடம் கட்டும் பணி**

திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்துக்கு புதிய கட்டடம் கட்டும் பணிகள் வரும் ஆகஸ்ட்டில் நிறைவுபெறும் என கல்லூரி முதல்வர் சே. பிரதாபன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை அவர் மேலும் கூறியது: இக் கல்லூரி தொடங்க கடந்தாண்டு முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதன்படி, கடந்தாண்டு 40 பேரும், இந்தாண்டு 40 பேரும் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்று வருகின்றனர். தாற்காலிகமாக ஸ்ரீபுரத்தில் உள்ள கட்டடத்தில் கல்லூரி இயங்கி வருகிறது.ராமையன்பட்டியில் ரூ.43 கோடியில் கல்லூரிக்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணி நடைபெறுகிறது. இதில், ரூ.10 கோடி ஒதுக்கீட்டில் நடைபெற்ற முதல் கட்ட பணிகள் நிறைவு பெற்றுள்ளன. நிர்வாகம், முதலாமாண்டு வகுப்பறைகள், முதல்வர் அறை உள்ளிட்டவை கட்டப்பட்டுள்ளதால், கல்லூரி விரைவில் ராமையன்பட்டிக்கு மாற்றம் செய்யப்படும். 2ஆவது கட்டமாக மாணவர், மாணவிகளுக்கான விடுதிகள், விளையாட்டு மைதானம், ஆய்வுக் கூடம், நிர்வாக அலுவலகம், மருத்துவமனை உள்ளிட்ட கட்டுமானப் பணிகள் ஜனவரியில் தொடங்கி ஆகஸ்ட் மாதம் நிறைவு பெறும்.40 ஏக்கரில் பசுந்தீவனம்: பசுந்தீவனம் உற்பத்தியை அதிகரித்து கால்நடைகளின் தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ரூ.65 லட்சத்தில் 40 ஏக்கரில் பசுந்தீவன பண்ணை தொடங்கப்பட்டது. விரைவில் விவசாயிகளுக்கு விதைகளும், நாற்றுகளும் வழங்கப்படும்.

நிகழாண்டு முதல் இம் மாவட்டத்தில் தமிழக அரசின் ரூ.85 லட்சம் உதவியில் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் விவசாயிகளுக்கு சுழற்சி முறையில் நாட்டுக் கோழிகள் வழங்கப்படும். குஞ்சு பொரிப்பகமும் ஏற்படுத்தப்படும்.கோமாரி இல்லை: மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதல் இல்லை. எந்தப் பகுதியிலும் நோய் அறிகுறிகள் கண்டறியப்படவில்லை. கடந்த 10 ஆண்டுகளகாவே கோமாரி நோய் தடுப்பூசி அளிக்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது என்றார் அவர்.

பேராசிரியர் சி. மணிவண்ணன், உதவிப் பேராசிரியர் எஸ். செந்தில்குமார் உடனிருந்தனர்.

**நிலக்கடலை விதை பரிசோதனை அவசியம்**

எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலையில் நல்ல மகசூல் பெற விதைப் பரிசோதனை அவசியம் என்று காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது: காஞ்சிபுரம் மாவட்டத்தை பொருத்தவரை, ஆடி மற்றும் கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை பயிர் பெருமளவில் சாகுபடி செய்யப்படுகிறது.கார்த்திகை பட்டத்துக்கு ஏற்ற ரகங்களாக டி.எம்.வி.7, டி.எம்.வி.13, வி.ஆர்.ஐ.2, வி.ஆர்.ஐ.3, டி.ஏ.ஜி.24, ஜெ.எல்.24 ஆகியவை உள்ளன.

இவற்றில் ஏதாவது ஒரு ரகத்தை சாகுபடி செய்யலாம்.நிலக்கடலையை பொருத்தவரை 70 சதவீத முளைப்புத்திறன் இருப்பது அவசியம்.30-க்கு 30 செ.மீ என்ற இடைவெளியில் ஏக்கருக்கு 80 கிலோ விதையை விதைக்கும்போது ஏக்கருக்கு 1,33,333 செடிகள் என்ற பயிர் எண்ணிக்கையை பராமரிப்பது எளிதாகும். தரமான விதையை பயன்படுத்தும்போது சராசரியாக 40 காய்களுக்கு குறையாமல் கிடைக்கும். இதனால் ஏக்கருக்கு 20 சதவீத கூடுதல் மகசூல் கிடைக்கும்.எனவே, 500 கிராம் விதை மாதிரியை விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரியில் நேரிலோ, தபால் மூலமாகவோ அனுப்பலாம். பரிசோதனை கட்டணமாக ரூ.30 செலுத்த வேண்டும் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

சொட்டு நீர்ப்பாசனத்தில் நெல் சாகுபடி: ஏக்கருக்கு 5 டன் மகசூல் சாதனை



**மதுரை: சொட்டு நீர்ப்பாசனத்தில் நெல் சாகுபடி செய்த மதுரை அண்டமான் விவசாயி சோலைமலை, ஏக்கருக்கு 4.917 டன் மகசூல் பெற்றுள்ளார்.**

அதிக மகசூல் பெற்றதற்காக ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, முதல்வர் ஜெயலலிதாவிடம் விருது பெற்றவர் தான், சோலைமலை. நெருக்கமான நெற்பயிரில், ததும்ப, ததும்ப தண்ணீர் பாய்ச்சும் நஞ்சை வயலில் சொட்டு நீர்ப்பாசனத்தை நினைத்து பார்க்க இயலாது. புதிய முயற்சியாக சோலைமலை, 43 சென்ட் வயலில் சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்தினார். வயலில் நேற்று அறுவடை நடந்தது. இதை பார்வையிட்ட விவசாய துணை இயக்குனர்கள் கனகராஜ், சாரநாத், ஜெயின் சொட்டு நீர்ப்பாசன நிறுவன அலுவலர்கள் செந்தில்குமார், வேல்முருகன் கூறியதாவது: பாரம்பரிய நெல் சாகுபடிக்கு 1200 மி.மீ., தண்ணீர் தேவை. திருந்திய நெல் சாகுபடிக்கு 800 மி.மீ., தேவைப்படுகிறது.

சொட்டு நீர்ப்பாசன சாகுபடிக்கு, 720 மி.மீ., தண்ணீர் போதும். சோலைமலை, இம்முறையில் 25க்கு 25 செ.மீ., இடைவெளியில் சன்ன ரக ஜெ.சி.எல்., நாற்று நடவு செய்தார். சொட்டு நீர்ப்பாசன முறையில் 4 வரிசைக்கு தண்ணீர் செல்லும் குழாய்களை அமைத்தார். ஒவ்வொரு குழாயிலும் 40 செ.மீ.,க்கு ஒரு சொட்டுவான் (துளை) அமைக்கப்பட்டது. தினமும் இரண்டரை மணி நேரம் தண்ணீர் பாய்ச்சுவார். முதலில் பயிர் வளர வாரம் ஒருமுறை அதிக யூரியா, குறைவான பொட்டாஷ், பின் 40 - 80 நாள் வரை நெல்மணி பிடிக்க, யூரியா குறைவாகவும், பொட்டாஷ் அதிகமாகவும் கரைசலாக சொட்டு நீர்ப்பாசன முறையில் வழங்கப்பட்டது. தேவையான அளவு தண்ணீர், உரம் கிடைத்ததால் ஒரு நாற்றில் 41 சிம்புகள் (சாதாரண சாகுபடியில் 20 சிம்பு) வளர்ந்தன. ஒவ்வொரு சிம்பிலும் உருவான கதிரில் 502 நெல் மணிகள் (சாதாரணமாக 250) இருந்தன. அறுவடை நேரத்தில் கதிர்களை ஆய்வு செய்ததில் எக்டேருக்கு 4.917 டன் (சாதாரணமாக மூன்றரை டன்) கிடைத்தது. சொட்டு நீர்ப்பாசன கருவிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 60 ஆயிரம் செலவாகும். அரசு மானியம் உண்டு. ஒருமுறை முதலீடு செய்தால், 10 ஆண்டுகள் தண்ணீர் சிக்கனத்துடன் காய்கறி, நெல் சாகுபடி செய்யலாம், என்றனர்.

## சுத்தமான மாமிசம் விற்பனை: கடை நவீனத்திற்கு ரூ.5 லட்சம்: உணவு பதப்படுத்தும் இயக்ககம் தகவல்

சிவகங்கை: ""இறைச்சி கடைகளை நவீனப்படுத்த, அதிக பட்சம் ரூ.5 லட்சம் வரை நிதி உதவி வழங்கப்படும்,'' என, மத்திய உணவு பதப்படுத்தும் இயக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.மத்திய, மாநில அரசுகள் இணைந்து, புதிதாக தேசிய உணவு பதப்படுத்தும் இயக்க திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்துகிறது. இதற்காக, மானிய பங்கு தொகையாக மத்திய, மாநில அரசுகள் முறையே 75:25 சதவீதம் வழங்குகிறது. தமிழகத்தில் விளையும், காய்கறி, பழம், தானியம் உள்ளிட்ட உணவு பொருட்களில், 30 சதவீதம் சேதமாவது, ஆய்வில் கண்டறிந்துள்ளனர். இதை தடுத்து, உணவு பொருட்கள் உற்பத்தி செய்யும், விவசாயிகளுக்கு சேத மதிப்பை குறைக்கும் விதத்தில், உணவு பதப்படுத்துதல் இயக்க திட்டம் மூலம், உணவு பதப்படுத்துதல் தொழிற்சாலை அமைக்க மானியம் வழங்கி வருகிறது. அதன்படி,

தொழிற்சாலை அமைக்க, கருவிகள், தளவாட சாமான்கள் மற்றும் தொழில் நுட்ப கட்டுமானத்திற்கு, அரசு 25 சதவீதம் அல்லது அதிக பட்சம் 50 லட்சம் வரை மானியம் வழங்குகிறது. குளிர்பதன வசதி மற்றும் பால் மற்றும் பால் பொருட்கள், இறைச்சி, மீன்களை எடுத்துசெல்ல, குளிரூட்டப்பட்ட வாகனம் வாங்குவதற்கென, 35 சதவீதம் மானியம் அல்லது அதிகபட்சம் ரூ.5 கோடி வரை மானியம் வழங்கப்படும்.

## மீன்பிடிக்க அனுமதி மறுப்பு

ராமேஸ்வரம்: ராமேஸ்வரம், பாம்பனில் கடந்த 3 தினங்களாக, சூறாவளி காற்றுடன் மழை பெய்கிறது. நேற்று, ராமேஸ்வரம் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு, ராட்சத அலைகள் எழுந்தது. மேலும் பலத்த மழை பெய்தது. மீன்பிடிக்க செல்ல மீனவர்களுக்கு, ராமேஸ்வரம் மீன்துறை அலுவலகத்தினர், அனுமதி டோக்கன் வழங்கவில்லை. இதனால் ராமேஸ்வரம், பாம்பனில் ஆயிரம் விசைப்படகுகள் கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## மேட்டூர் அணை நீர் திறப்பு குறைப்பு

மேட்டூர்: டெல்டா மாவட்டங்களில், பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதால், மேட்டூர் அணை நீர் திறப்பு, வினாடிக்கு, 3,000 கன அடியாக குறைக்கப்பட்டது.. இந்நிலையில், டெல்டாவில் மீண்டும் பருவமழை தீவிரம் அடையும் என்பதால், மேட்டூர் அணை நீர் திறப்பு, நேற்று காலை, வினாடிக்கு, 3,000 கன அடியாக குறைக்கப்பட்டது. நேற்று அணையின் நீர் மட்டம், 85 அடியாகவும், நீர் இருப்பு, 47 டி.எம்.சி.,யாகவும் இருந்த நிலையில், வினாடிக்கு, 3,500 கன அடி நீர் அணைக்கு வந்து கொண்டிருந்தது.

**வரத்து அதிகரிப்பால்பெரிய வெங்காயம் விலை சரிவு**



திண்டுக்கல்: திண்டுக்கல் வெங்காய சந்தையில், பெரிய வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால், அதன் விலை சரிவடைந்துள்ளது. அதேசமயம், சின்ன வெங்காயத்தின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.தமிழகத்தில் உள்ள முக்கிய வெங்காய சந்தைகளில், திண்டுக்கல் சந்தையும் ஒன்று.இச்சந்தை, திங்கள், புதன், வெள்ளி ஆகியநாட்களில் இயங்குகிறது. இங்கிருந்து இலங்கை, மலேசியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு, வெங்காயம்ஏற்றுமதி செய்யப்படுகிறது.சந்தைக்கு நேற்று பெரிய வெங்காயம் (பல்லாரி) வரத்து அதிகமாக இருந்தது. பெங்களூரு, நாசிக், ஆந்திராவில் இருந்து நேற்று மட்டும், 12 லாரிகளில் பெரிய வெங்காயம் வந்தது (ஒரு லாரிக்கு 15 டன்).இவை, கிலோ 20 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்கப்பட்டன. கடந்த வாரம் பெரிய வெங்காயம்கிலோ 50 ரூபாய் முதல் 70 ரூபாய் வரை ற்பனையானது. திருப்பூர், துரையூர், ஆண்டிபட்டி, ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயம் வரத்து உள்ளது. தற்போது பெய்யும் திடீர்மழையால், சின்னவெங்காயத்தின்வரத்து குறைந்துள்ளது. இதனால், திண்டுக்கல் வெங்காய சந்தையில், ஒரு கிலோ சின்ன வெங்காயம் 50 ரூபாய் முதல்70 ரூபாய் வரை விற்கப்பட்டது. கடந்தவாரம் சின்ன வெங்காயத்தின் விலை கிலோ 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை இருந்தது. வரத்து குறைவால், கடந்த வாரத்தை விட, விலை உயர்ந்துள்ளது.

**பாசுமதி ஏற்றுமதி 40 லட்சம் டன்னை தாண்டும் புதிய ரகம், தேவை அதிகரிப்பு**



புசா பாசுமதி 1509 ரகத்தின் வரவால், நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, நடப்பு நிதியாண்டில், 40 லட்சம் டன்னை தாண்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இது, கடந்த நிதியாண்டில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை (34.60 லட்சம் டன்) காட்டிலும், 11 சதவீதம் அதிகமாகும்.

புசா பாசுமதி ரகம்இந்திய வேளாண் ஆராய்ச்சிநிறுவனத்தால் மேம்படுத்தப்பட்ட, புசா பாசுமதி 1509 ரக அரிசி, வர்த்தக ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டு, நடப்பு கரீப் பருவத்தில் பயிரிடப்பட்டுள்ளது.

ஒரு ஹெக்டேருக்கு இப்புதிய ரகபாசுமதி அரிசியின் உற்பத்தி, 6.5 டன்னாக இருக்கும்.அதேசமயம், பாப்புலர் புசா 1121 ரக பாசுமதி விளைச்சல், ஒரு ஹெக்டேருக்கு, 4.5 டன் அளவிற்கே இருக்கும்.இதனுடன் ஒப்பிடும் போது, புதிய புசா ரக வரவால், ஒரு ஹெக்டேருக்கு, 1.5 டன் பாசுமதி அரிசி கூடுதலாக கிடைக்கும்.இதையடுத்து, நடப்பாண்டில், புசா ரக பாசுமதி அரிசி உற்பத்தி, 30 ஆயிரம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.கடந்த 2010–11ம் நிதியாண்டில், நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 23.70 லட்சம் டன்னாக இருந்தது. இது, ரூபாய் மதிப்பின் அடிப்படையில், 11,355 கோடியாகும்.இது, 2011–12ம் நிதியாண்டில் முறையே, 31.80 லட்சம் டன், 15,450 கோடி ரூபாயாக இருந்தது.சென்ற 2012–13ம் நிதியாண்டில், நம்நாட்டிலிருந்து, 19,409 கோடி ரூபாய் மதிப்பிலான, 34.60 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என, ‘அபெடா’ புள்ளிவிவரத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இங்கிலாந்து**இந்நிலையில், மேற்கு ஆசியா,இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில், இந்திய பாசுமதி அரிசிக்கான தேவை சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டுள்ளது.இதனை எடுத்துக்காட்டும் விதமாக, நடப்பு 2013–14ம் நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திலேயே, நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, 19.30 லட்சம் டன்னை தாண்டியுள்ளது. இதன் மதிப்பு, 14,118 கோடி ரூபாயாகும்.

எனவே, நடப்பு நிதியாண்டில், நாட்டின் ஒட்டு மொத்த பாசுமதி அரிசி ஏற்றுமதி, 40 லட்சம் டன்னை எட்டும் என, இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் எம்.பி. ஜிண்டால் தெரிவித்தார்.கொத்தவரைசென்ற 2011–12ம் நிதியாண்டில், ஒட்டு மொத்த வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், 16,523.87 கோடி ரூபாய் பங்களிப்புடன், கொத்தவரை ஏற்றுமதி முதலிடத்தில் இருந்தது. அப்போது, பாசுமதி அரிசி ஏற்றுமதி, 15,449.60 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தது.சென்ற 2012–13ம் நிதியாண்டில், இவற்றின் ஏற்றுமதி, முறையே, 21,287.01 கோடி ரூபாய் மற்றும் 19,419.39 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தன.ஆனால், நடப்பு நிதியாண்டின் ஒட்டு மொத்த வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், பாசுமதி அரிசி முதலிடத்தை பிடிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு, சர்வதே சசந்தையில் கொத்தவரையின் விலை சரிவடைந்ததே முக்கிய காரணமாகும். இரண்டுஆண்டுகளுக்கு முன்பாக, ஒருகுவிண்டால், கொத்தவரையின் விலை, 1 லட்சம் ரூபாயாக இருந்தது. இது தற்போது, 85 சதவீதம் வீழ்ச்சி கண்டு, 15 ஆயிரம் ரூபாயாக சரிவடைந்துள்ளது.

அதேசமயம், இதே காலத்தில், சர்வ தேச சந்தையில், ஒரு குவிண்டால்,பாசுமதி அரிசியின் விலை, 50 சதவீதம் அதிகரித்து, 48,610 ரூபாயிலிருந்து, 73,150 ரூபாயாக உயர்ந்துள்ளது.வளர்ச்சிகடந்த 2011–12ம் நிதியாண்டுடன் முடிவடைந்த நான்கு ஆண்டுகளில், இந்தியாவின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, ஒட்டு மொத்த அளவில் ஆண்டுக்கு சராசரியாக, 22 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என, தரக்குறியீட்டு நிறுவனமான ‘கேர்’ தெரிவித்துள்ளது.

இதற்கு, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள், ஈராக், குவைத் ஆகிய நாடுகளில், இந்திய பாசுமதி அரிசிக்கான தேவை சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டதே முக்கிய காரணம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.உள்நாடு மற்றும் வெளிநாடுகளில்

தேவை அதிகரித்துள்ளதையடுத்து, நடப்பாண்டில், ஒரு கிலோ பாசுமதி அரிசியின் கொள்முதல் விலை, 59 ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, கடந்தாண்டில், 38 ரூபாயாக இருந்தது என, எம்.பி.ஜிண்டால் மேலும் தெரிவித்தார்.

**விவசாயிகளிடம் நேரடி நெல் கொள்முதல் : தேசியவாத காங்., தலைவர் வலியுறுத்தல்**

புதுச்சேரி : விவசாயிகளிடமிருந்து இந்திய உணவுக் கழகம் நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என தேசியவாத காங்., வலியுறுத்தியுள்ளது. இது குறித்து அக்கட்சியின் தலைவர் சுந்தரமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை: புதுச்சேரியில் உரவிலை ஏற்றம், உரத்தட்டுப்பாடு, விவசாயப்பணிக்கு ஆள் பற்றாக்குறை விவசாய பணி செய்வதற்கு கூலி உயர்வு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு விவசாயம் செய்வதற்கு விவசாயிகள் தீவிரம் காட்டுவதில்லை. மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு விற்பனைக்குக் கொண்டு வரும்போது இடைத்தரகர்கள் கூட்டு சேர்ந்து அவர்களுக்குள்ளாக விலை நிர்ணயம் செய்து அடிமாட்டு விலைக்கு கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைகின்றனர். தற்போது மத்திய அரசு குவிண்டால் ஒன்றுக்கு 1250 ஆக உயர்த்தியுள்ளது. இந்த விலை விவசாயிகளுக்கு போய் சேருவதற்கு இந்திய உணவுக் கழகம் நேரடியாக நெல் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.அரசு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை ஒற்றை அவியல் அரிசியாக்கி மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். இப்படி அரசு செயல்படுவதன் மூலம் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை கிடைக்கும். மில் அதிபரிடம் கொள்முதல் செய்யப்பட்ட தரமற்ற அரிசியால் அரசுக்கு ஏற்படும் இழப்பு, அவப்பெயர் தடுத்து நிறுத்த முடியும். எனவே அரசு இது தொடர்பாக ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**காஞ்சிபுரம்:கரீம் சம்பா நெல் சாகுபடியை அடுத்து, நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில், காஞ்சி**

புரம் மாவட்டத்தில், ஐந்து நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத் தில், கரீப் சம்பா பருவ சாகுபடியை, விவசாயிகள் துவக்கியுள்ளனர்.

விவசாயிகள் சாகுபடி செய்யும் நெல்லை, அரசே நேரடியாக கொள்முதல் செய்ய வசதியாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில், காஞ்சிபுரம் வட்டத்தில் முசரவாக்கம், குருவிமலை, உத்திரமேரூர் வட்டத்தில் திருப்புலிவனம், புலியூர் மற்றும் மதுராந்தகம் வட்டத்தில் புலிபரகோவில் ஆகிய பகுதிகளில், நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள், திறக்கப்பட உள்ளன.

**விவசாய கூலி ஆட்கள் கிடைப்பதில் சிக்கல் : ஊரக வேலைகளை நிறுத்த வலியுறுத்தல்**

திண்டிவனம் : திண்டிவனம் பகுதியில் தேசிய ஊரக வேலைகள் நடப்பதால் விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

திண்டிவனம் தாலுகாவில் மரக்காணம், மயிலம், ஒலக்கூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இந்த பகுதியில் உள்ள கிராமமக்கள் விவசாயம் செய்வதையே முக்கிய தொழிலாக கொண்டுள்ளனர். வருடத்தில் மூன்று பருவத்தில் பெய்யும் பருவ மழையை வைத்து விவசாயிகள் இரண்டு போகம் விவசாயம் செய்வர். அதில் இருந்து வரும் வருமானத்தில் குடும்பத்தின் ஒரு ஆண்டு செலவை செய்து வருகின்றனர்.

தவிப்புஇந்த ஆண்டு பருவ மழை சரியான முறையில் பெய்யாததால் இந்த பகுதிகளில் உள்ள விவசாயிகள் விவசாய பணிகளை மேற்கொள்ள முடியாமல் தவித்தனர். சில நாட்களாக பலத்த மழை பெய்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து, சம்பா நெல் நடவு பணியை மேற்கொள்ள நாற்று எடுப்பது, தற்பூசணி விதை @பாட, மணிலா பயிர் செய்ய நிலத்தை உழுவது போன்ற

விவசாய பணிகளை செய்ய துவக்கினர்.ஊரக வேலை

திண்டிவனம் தாலுகாவில் உள்ள ஊராட்சிகளில் ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ஏரி, குளம், வரத்து வாய்க்கால்கள் தூர்வாரும் பணி நடந்து வருகிறது. இதனால் விவசாய வேலைகளுக்கு கூலி ஆட்கள் கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நெற்குணம் விவசாயி ஆறுமுகம் கூறியதாவது:

தேசிய ஊரக வேலை வாய்ப்பு பணிகள் நடப்பதால் கூலி ஆட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் வைத்துள்ளவர்கள் அவரவர்களே விவசாய பணிகளை செய்கின்றனர். ஐந்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் கூலி ஆட்களை வைத்து தான் விவசாயம் செய்ய முடியும்.பருவத்தில் பயிர் செய்தால்தான் விளைச்சல் இருக்கும். இப்போது கூலி ஆட்கள் கிடைக்காமல் பல விவசாயிகள் விவசாய பணிகளை மேற்கொள்ளாமல் உள்ளனர். இதனால் இந்த ஆண்டு விவசாய பணிகள் குறைவாக நடந்து வருகிறது. இவ்வாறு ஆறுமுகம் கூறினார்.

எதிர்பார்ப்பு

விவசாய பணிகள் செய்ய போதிய மழைபெய்தும் கூலி வேலைக்கு ஆட்கள் கிடைக்காததால், விவசாய பணிகளை மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர். இதனால் அரசு அதிகாரிகள் விவசாய பணிகள் முடியும் வரை ஊரக வேலை வாய்ப்புகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**மார்க்கெட் கமிட்டியில் நெல் கொள்முதல் துவக்கம்**

செஞ்சி : செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் வியாபாரிகளுடன் உடன்பாடு ஏற்பட்டதால் நெல் கொள்முதல் நடத்தது.செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் கோரிக்கைகளை வலியுறுத்தி வியாபாரிகள் இரண்டு நாட்களாக நெல் கொள்முதலை நிறுத்தினர். கடந்த 3ம் தேதி நடந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.

நேற்று அதிகாரிகள், வியாபாரிகளுடன் மீண்டும் பேச்சு வார்த்தை நடந்தது. இதில் வியாபாரிகளின் கோரிக்கையை ஏற்று புதிய கண்காணிப்பாளரை நியமிக்கவும்,

பணம் பட்டுவாடா செய்யாமல் உள்ள வியாபாரிகளை கொள்முதலில் அனுமதிக்காமல் தடுக்கவும் அதிகாரிகள் ஒப்பு கொண்டனர்.
உடனடியாக புதிய கண்காணிப்பாளரை நியமித்தனர். இதையடுத்து பகல் 2 மணிக்கு நெல் கொள்முதல் ஏலம் நடந்தது. ஏலமுடிவுகள் அறிவிக்கப்பட்ட போதும் நேரம் கடந்து ஏலம் நடந்ததால் விவசாயிகளுக்கு இன்று பணப்பட்டுவாடா செய்ய உள்ளனர். கடந்த 1ம் தேதி நெல் கொண்டு வந்து மூன்று நாட்களாக காத்திருந்த விவசாயிகள் நேற்று சற்று நிம்மதியுடன் வீடு திரும்பினர்.

**மழையால் மரவள்ளி கிழங்கு சேதம்**

மரக்காணம் : மரக்காணம் பகுதியில் கனமழை பெய்ததால் அறுவடைக்கு தயாராக இருந்த மரவள்ளி கிழங்குகள் அழுகி நாசமாகின.
மரக்காணம் பகுதியில் கந்தாடு, புதுப்பாக்கம், திருக்கனூர், நடுக்குப்பம், வண்டிப்பாளையம், கோட்டிக்குப்பம் உள்பட இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்துள்ளனர்.
இப்பகுதியில் விவசாயிகள் ரோஸ் மரவள்ளி கிழங்கு செடியை சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டுள்ளனர். இது உணவுக்கு பயன்படுகிறது. தோட்டத்திற்கே வந்து சிறு வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். தற்போது பெய்த கனமழையால் அறுவடைக்கு தயாராக இருந்த நூறு ஏக்கர் மர வள்ளி கிழங்கு செடிகள் அழுகியதால் விவசாயிகள் கவலைஅடைந்துள்ளனர்.

**பால் உற்பத்தியாளர்கள் நல சங்கம் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை**

விழுப்புரம் : தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரத்தில் நடந்தது. விழுப்புரம் ஏ.எஸ்.ஜி., திருமண மண்டபத்தில் நடந்த கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் அரிகரன் தலைமை தாங்கினார். மாவட்ட பொரு ளாளர் லீமாரோஸ் சார்லஸ்,

துணைத் தலைவர் கணேசன் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் அன்பரசு வரவேற்றார்.

மாவட்ட துணை செயலாளர்கள் தங்கவேல், ஏழுமலை பேசினர். பால் உற்பத்தியாளர்கள் நல சங்கத்தின் மாநில இணை செயலாளர் நாராயணன், பால் கூட்டுறவு சங்க பணியாளர்கள் சங்கத்தின் மாநில துணை செயலாளர் முனுசாமி சிறப்புரை நிகழ்த்தினர்.

மாட்டுத் தீவன விலை 70 சதவீதம் உயர்ந்துள்ளதால், கூட்டுறவு பால் சங்கத்திற்கு தமிழக அரசு மானிய நிதியுதவி அளிக்க வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு 50 சதவீத மானியத்தில் மாட்டுத் தீவனம் வழங்க வேண்டும்.

கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க பணியாளர்களுக்கு பணி நிரந்தரம், ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும். விழுப்புரம் ஒன்றியத்தின் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் சங்க பிரதிநிதிகளை அழைத்து அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.மாவட்ட இணை செயலாளர் தனுசு நன்றி கூறினார்.

**மரம் வளர்ப்பு திட்டத்தில் இலவச மரக்கன்று வழங்கல்**

நாமக்கல்: நாமக்கல் மாவட்ட வன அலுவலகத்தில், மாபெரும் மரம் வளர்ப்பு திட்டத்தில், அரிய வகை மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. தமிழக முதல்வரி மாபெரும் மரம் வளர்ப்புத் திட்டம், 2011ம் ஆண்டில் துவங்கப்பட்டது. மாநிலம் முழுவதும், 32 மாவட்டங்களில், வரும், 2014-15ம் ஆண்டுக்குள், 65 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய இலக்கு நிர்ணயக்கப்பட்டு, மரக்கன்றுகள் நடப்படுகிறது. அரசு மற்றும் தனியார் பள்ளிகள், அரசு அலுவலகங்கள், தனியார் கல்லூரி, நெடுஞ்சாலை ஓரங்கள் உள்ளிட்ட பகுதிகளில், மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது. அந்தவகையில், நாமக்கல் மாவட்டத்தில், கொல்லிமலை, கலெக்டர் முகாம் அலுவலக வளாகம் ஆகிய பகுதிகளில், மரக்கன்றுகள் பதியம்

போடப்பட்டு, குறிப்பிட்ட உயரம் வளர்ந்தவுடன் நடப்படுகிறது. இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படுவதால், ஆர்வமுள்ளவர்கள் மாவட்ட வனத்துறை அலுவலகத்தை நாடி, மரக்கன்றை பெற்றுச் செல்கின்றனர். மகிளம், மலைவேம்பு, செண்பகம், ஆலமரம், அரசமரம் உள்ளிட்ட மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது. "விருப்புமுள்ளவர்கள் தேவையான மரங்கள் குறித்த விபரங்களை, முறைப்படி கடிதத்தில் எழுதி, வனச்சரக அதிகாரிகளிடம் ஒப்படைத்து மரக்கன்றை பெறலாம்' என, வன அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கோமாரி நோயை கட்டுப்படுத்த பஞ்சாயத்து தலைவர்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை**

தர்மபுரி: கோமாரி நோயை கட்டுப்படுத்த பஞ்சாயத்து நிர்வாகத்துடன், கால்நடை மருத்துவர்கள் ஒருங்கிணைந்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம், மேலும், மாவட்டத்தில், விவசாயிகள் அதிகளவில் கால்நடை வளர்ப்பிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். மாவட்டத்தில், மூன்று லட்சம் கால்நடைகள் உள்ளன. இதனால், மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்பட்ட நேரங்களிலும் விவசாயிகளுக்கு, கால்நடைகள் மூலம் ஓரளவுக்கு வருவாய் கிடைத்து வந்தது. இந்நிலையில், மாவட்டத்தில், கடந்த சில மாதங்களாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கி வருகிறது. கால்நடைகள் கோமாரி நோயால் இறந்தாதால் விவசாயிகள் கண்ணீர் விடும் நிலை ஏற்பட்டதுடன், அவர்களின் வாழ்வாதரமும் பாதிக்கப்பட்டு வந்தது. மாவட்டம் முழுவதும், கோமாரி நோயால் இறந்த மாடுகளுக்கு, தமிழக அரசு இழப்பீடு வழங்கவும், மாவட்ட நிர்வாகம் கோமாரி நோய் பரவுவதை கட்டுப்படுத்த போர் கால நடவடிக்கை எடுக்க, கால்நடை வளர்ப்பவர்கள் மற்றும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

இதையடுத்து, மாவட்ட நிர்வாகம், மாவட்டம் முழுவதும் தொடர் கோமாரி நோய் தடுப்பு முகாம்களை நடத்தி வருகிறது. மேலும் காற்றின் மூலம் பரவும் கோமாரி நோய் பரவ காரணமான பிக்கார்னோ(ஆப்தா) என்ற வைரஸை கட்டுப்படுத்த, கால்நடை பாராமரிப்புத்துறை மற்றும் பஞ்சாயத்து தலைவர்கள் மூலம் நோய் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் கூறியது:
தர்மபுரி மாவட்டத்தில் கோமாரி நோய் பரவுவதை தடுக்க தற்போது அனைத்து பகுதிகளும் தொடர் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. கோமாரி நோய் பாதித்த கால்நடைகளை கண்டறிந்து, அவற்றிக்கு தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.மேலும் கோமாரி நோய் பரவ காரணமான பிக்கார்னோ(ஆப்தா) என்ற காற்றின் மூலம் பரவும் வைரஸை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் பஞ்சாயத்து தலைவர்கள் மூலம் கால்நடை வளர்ப்பவர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று பிக்கார்னோ வைரஸை கட்டுப்படுத்த தடுப்பு மருந்துகளான சலவை சோடா பவுடர், பிளிச்சிங் பவுடர் ஆகியவற்றை வழங்கி வருவதுடன், கால்நடைகள் கட்டப்பட்டுள்ள இடங்களை சுற்றி அவற்றை இடும் முறை குறித்தும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.இதன் மூலம் மாவட்டத்தில் தற்போது கோமாரி நோய் பரவுவது பெரும் அளவில் தடுக்கப்பட்டு வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**பி.ஜே.பி. விவசாய அணி ஆர்ப்பாட்டம்**

விக்கிரமசிங்கபுரம்: விக்கிரமசிங்கபுரத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நகர பா.ஜ. கட்சியினர் விவசாய அணி சார்பில் கண்ட ஆர்ப்பாட்டம் நடந்தது.ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய அணி நகர தலைவர் வைகுண்டமணி தலைமை வகித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் குட்டி, மாநில பொதுக்குழு உறுப்பினர் பாலசந்திரன், வேர்கள் பிரிவு மாநகர், மாவட்டத் தலைவர் வள்ளிநாயகம், அம்பை நகர பொது செயலாளர் பால்பாண்டியன், மாவட்ட இளைஞர் அணி துணை தலைவர் ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
மாவட்ட செயற்குழு உறுப்பினர் ராமராஜ்பாண்டியன் வரவேற்றார். ஆர்ப்பாட்டத்தில் தேசிய பொதுக்குழு உறுப்பினர் அன்புராஜ், மாநில செயற்குழு உறுப்பினரும், சிறுபான்மை அணி கோட்டப் பொறுப்பாளருமான இருதயராஜ், விவசாய அணி மாவட்டத் தலைவர் கந்தசாமி ஆகியோர் பேசினர்.ஆர்ப்பாட்டத்தில் தாமிரபரணி நதியில் கழிவு நீர் கலந்து மாசுபடுவதை

தடுக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வனவிலங்குகளால் பாதிப்படைந்த பயிர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும். வறட்சியால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும். பாபநாசம் டூ அம்பாசமுத்திர்ம தார் சாலையை உடனே சீர் செய்ய வேண்டும். இந்த அறநிலையத் துறைக்கு சொந்தமான நிலங்களை மீட்காமல் ஆக்கிரமிப்பாளர்களுக்கு துணை போகும் அரசு அதிகாரிகளை கண்டித்தும், விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட அணைத்து வார்டுகளிலும் முறையான குடிநீர் வழங்கி வார்டுகளில் எரியாத விளக்குகளை சரி செய்ய வேண்டும். செயல் இழந்து போன நகராட்சியை கண்டித்தும், குஜராத் போன்று பூரண மதுவிலக்கு தமிழகத்திலும் அமுல் படுத்தப்பட வேண்டும் எனபன போன்ற பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

இளைஞர் அணி முன்னாள் மாவட்ட செயலாளர் அந்தோணிராஜ், செயற்குழு உறுப்பினர் முத்துசெல்வம், ஒன்றிய வர்த்தக அணி தலைவர் ராஜகணேஷ், அம்பை நகர சிறுபான்மை அணி தலைவர் பீட்டர், அம்பை நகர மகளிர் அணி தலைவர் சுப்புலெட்சுமி, விக்கிரமசிங்கபுரம் சிறுபான்மை அணி தலைவர் செபஸ்டியன், பாரதிய மஸ்துர் சங்கம் கண்ணன் உட்பட கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.

**தண்ணீரால் மூழ்கியுள்ள வாழை பயிர்கள்**

களக்காடு: களக்காடு அருகே குளத்துநீர் வயலுக்குள் புகுந்ததால் 50 ஏக்கரில் பயிர் செய்த வாழை, நஞ்சை நெற்பயிர்கள் அழுகி வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

களக்காடு தாமரை குளம் மேல்புறம் சேர்ந்தநேரியான், தென்நாட்டு விளாகம், செண்பகபேரி ஆகிய குளபுரவு விவசாய நிலங்கள் சுமார் 300 ஏக்கர் உள்ளது. தற்போது பெய்த மழையினால் தாமரைகுளம் பெருகி மறுகால் பாய்கிறது. தாமரைகுளத்தில் கடந்த சில ஆண்டுகளாக தூர்வாரப்படாததால் குளத்தில் அமலை செடிகள் நிரம்ம குளத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமித்து உள்ளது. குறிப்பாக மேல்பகுதி மற்றும் வடபகுதியில் அமலைசெடிகள் நிறைந்துள்ளது. மேலும் குளம் தூர்வாரப்படாததால் குளம் மேடாகிவருகிறது.இந்நிலையில் குளம்

பெருகியுள்ளதால் குளத்தின் மேல்கரை பலமில்லாததால் கரை உடைந்து மேல்புறமுள்ள வயல்களுக்குள் தண்ணீர் புகுந்துள்ளது. இதனால் இப்பகுதியில் பயிர் செய்துள்ள வாழை மற்றும் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது. சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் செய்துள்ள நஞ்சை மற்றும் வாழை பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். இது குறித்து இப்பகுதி விவசாயி ரஹிமான்சா கூறுகையில் ஏற்கனவே மழை சரிவர பெய்யாமல் விவசாயிகளை ஏமாற்றி வரும் வேளையில் மிகவும் கஷ்டப்பட்டு பயிர் செய்துள்ள விவசாய நிலங்கள் நீரில் மூழ்கி வருவதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். தாமரைகுளத்தின் மேல்கரையை செப்பணிட்டு குளத்துநீர் வயலுக்கு வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பலமுறை பொதுபணித்துறை மற்றும் வருவாய்துறையினருக்கு கோரிக்கை விடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. குளத்து கரையை செப்பணிட குளத்தில் உள்ள கரம்பை மண்ணை எடுத்து போடவும் வருவாய்துறை அனுமதிக்கவில்லை. இதனால் தற்போது குளம் பெருகியுள்ளதால் குளத்து நீர் எங்கள் பகுதிக்கு புகுந்துள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்கவும், குளத்தை தூர்வாரி மேல்பகுதி கரையை பலபடுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**கன மழை பெய்ய விவசாயிகள் கிணற்று பாசனமும் "கை' கொடுக்கவில்லை**

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் சில நாட்களாக பரவலான மழை, விவசாய நிலங்களை நனைக்கும் அளவுக்கு மட்டுமே பெய்துள்ளது. கண்மாய்கள், ஆழ்துளை கிணறுகள் "கை' விரிப்பால், கன மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் சில நாட்களாக பரவலாக, மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக பாம்பன், ராமேஸ்வரம் உள்ளிட்ட கடலோர பகுதிகளிலும், ராமநாதபுரம் நகரிலும் மழை கொட்டி தீர்த்தது. பரமக்குடி, முதுகுளத்தூர், நயினார்கோவில், போகலூர், கடலாடி, கமுதி உள்ளிட்ட பகுதிகளில், போதிய

மழை பெய்யவில்லை. பெரும்பாலான விவசாயிகள், சாகுபடி தேவைக்காக இன்னும் தண்ணீர் தேவையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.
ராமநாதபுரம் பெரிய கண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்க மாவட்ட தலைவர் பாலசுந்தரமூர்த்தி கூறியதாவது: தரையை நனைக்கும் அளவுக்கு மட்டுமே மழை பெய்துள்ளது. விவசாயம் முழு பயனுக்கு வரக்கூடிய வகையில் எந்த கண்மாயிலும் தண்ணீர் இல்லை. ராமநாதபுரம் பெரிய கண்மாயில் ஒரு அடி உயரத்திற்கு மட்டுமே தண்ணீர் தேங்கியுள்ளது. இதுவும் சில நாட்களே பயன்தரும்.
வைகை பழைய ஆயக்கட்டு கணக்குப்படி, 2000 மில்லியன் கன அடி நீர், வைகை அணையில் இருந்தால், பாசனத்திற்காக நீர் திறக்க வேண்டும் என்பது விதி. ஆனால், கடந்த 15 நாட்களுக்கு முன் அணையில் 631 மில்லியன் கன அடி மட்டுமே தேங்கியுள்ளது. ராமநாதபுரம் பாசனத்திற்கு, தண்ணீர் திறந்து விடுவதில் சிக்கல் தான். பயிர் சாகுபடிக்கு இன்னும் தண்ணீர் தேவை உள்ளதால், கண்மாய்கள் நிரம்பும் அளவிற்கு மழை பெய்ய வேண்டும், என்றார்.
கொன்னக்குடி விவசாயி வீரமணி கூறும்போது: திருவாடானை தாலுகாவில் 45 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் விவசாயத்தை காப்பாற்றும் வகையில் மழை பெய்யவில்லை. பயிர் முளைத்து 45 நாட்கள் கடந்துவிட்டதால், சாகுபடி பருவத்திற்கு அதிகம் தண்ணீர் தேவைப்படுகிறது. சில நாட்களாக பெய்து வரும் மழையால் எந்த பயனும் இல்லை. களை கொல்லி, களை எடுப்பு போன்ற 60 சதவீத பணிகள் முடிந்துவிட்டது. நிலத்தில் ஊடுருவிய உவர்ப்பு தன்மையால், ஆழ்துளை கிணற்று நீரையும் பயன்படுத்த முடியவில்லை, என்றார்.கடலோர உவர் ஆராய்ச்சி மைய இயக்குனர் துரைசிங், பேராசிரியர் துக்கையண்ணன் கூறியதாவது: கடலோர கிராமங்களில் களிமண் கலந்த, வண்டல் மண் அதிகம் காணப்படுகிறது.16 முதல் 25 அடி ஆழம் வரை தான், தண்ணீர் பயன்படுத்தக்கூடிய வகையில் இருக்கும். களிமண் திட்டை தாண்டி தோண்டும்போது, தண்ணீர் உவர்ப்பு தன்மை ஏற்பட்டு விடும்.இதனால், விவசாயிகளை உறை கிணறுகள் மூலம் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து கொள்ள அறிவுறுத்தியுள்ளோம், என்றனர்.குறைகிறதுசாகுபடி பரப்பளவு

* கடந்த நிதியாண்டில், ஒரு லட் சத்து 19 ஆயிரம் எக்டேர் நெல் சாகுபடி நடந்தது. இந்த நிதியாண்டில், ஒரு லட்சத்து 11 ஆயிரம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.* 2012-13ல், 19,500 எக்டேரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டது. நடப்பாண்டு, 11 ஆயிரம் எக்டேர் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.* 2012-13ல், கடலாடி, முதுகுளத்தூர், திருப்புல்லாணி உள்ளிட்ட பகுதிகளில் கொத்தமல்லி 1700 எக்டேரில் சாகுபடி நடந்தது. நடப்பாண்டு, 600 எக்டேர் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

**கோமாரி நோய் தடுப்பு ஆலோசனை கூட்டம்**

சிவகங்கை: சிவகங்கையில், கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை தடுப்பது தொடர்பான ஆலோசனை கூட்டம் நடந்தது. கலெக்டர் ராஜாராமன் தலைமை வகித்தார்.

கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் (பொறுப்பு) நாகராஜன் முன்னிலை வகித்தார். கால்நடைத்துறை உதவி இயக்குனர்கள், டாக்டர்கள் பங்கேற்றனர். கலெக்டர் பேசுகையில், மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டதால், கோமாரி நோய் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கோவில் மாடுகள் அதிகம் உள்ளன.இது தவிர மஞ்சுவிரட்டு, ரேக்ளா ரேஸ் போன்றவற்றிற்காக மாடுகள் வளர்க்கப்படுகின்றன. அனைத்து மாடுகளுக்கும் தடுப்பூசி போடவேண்டும் என்றார்.

**ரோட்டில் மாடுகள்; உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை "தினமலர்' செய்தி எதிரொலி**

ராஜபாளையம்: "தினமலர்' நாளிதழ் செய்தி எதிரொலியாக, ரோட்டில் திரியும் மாடுகளை அகற்ற, உரிமையாளர்களுக்கு, போலீஸ் அதிகாரிகள் நான்குநாள் அவகாசம் கொடுத்து உள்ளனர். மீறும்பட்சத்தில், மாடுகளை பிடித்து, கோசாலையில் பராமரிக்க உள்ளதாக, எச்சரிக்கை செய்துள்ளனர். ராஜபாளையம் நகரில் ரோட்டில் திரியும் மாடுகளால் ஏற்படும் விபத்து குறித்து," தினமலர்'

நாளிதழில் செய்தி வெளியானது. இதையடுத்து, ராஜபாளையம் நகராட்சி அலுவலகத்தில், தலைவர் தனலட்சுமி தலைமையில், நேற்று எச்சரிக்கை கூட்டம் நடந்தது. தாசில்தார் தனலட்சுமி, அசோகன் டி.எஸ்.பி., நகராட்சி கமிஷனர்(பொறுப்பு) ராமசாமி முன்னிலை வகித்தனர். மாடு உரிமையாளர்கள் பலர் கலந்துகொண்டனர். போக்குவரத்து இன்ஸ்பெக்டர் முத்தரசு, ""மாடுகளை கொட்டத்தில் கட்டிப்போட்டு வளர்க்காததால், இந்த பிரச்னை வருகிறது. நான்கு நாள் அவகாசத்திற்குள், மாடுகளை கட்டிப்போடவேண்டும். பின், ரோட்டிற்கு வரும் மாடுகளை, நகராட்சி, வருவாய், கால்நடை துறை உதவியுடன் பிடித்து, விருதுநகர் பாண்டியன்நகரில் உள்ள கோசாலையில் அடைக்கப்படும். பின், அபராதம், மாடு பராமரிப்பு, கொண்டு சென்றதற்கான வண்டி வாடகை போன்றவை, வசூலிக்க சட்டத்தில் இடம் உள்ளது. அபராதம் கட்டிவிட்டு, மீண்டும் மாடுகள் ரோட்டிற்கு வந்தால், திருநெல்வேலியில் உள்ள கோசாலையில் அடைக்க ஏற்பாடு செய்யப்படும்," என்றார். உரிமையாளர்கள், "முன்பு மலையடிவாரத்தில் மாடு மேய்க்க வனத்துறையினர் "பாஸ்' கொடுப்பர். தற்போது, இந்த முறை இல்லாததால், மாடுகள் ரோட்டிற்கு வருகின்றன,' என்றனர். ஜெ., பேரவை மாவட்ட செயலாளர் செல்வ சுப்பிரமணிய ராஜா, நகராட்சி துணைத்தலைவர் ராதா கிருஷ்ணன், இன்ஸ்பெக்டர் ராம்குமார், சுகாதார அலுவலர் இளங்கோ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**மாடுகளுக்கு இழப்பீடு கேட்டு ஆர்ப்பாட்டம்**

கோபிசெட்டிபாளையம்: கோமாரி நோயை கட்டுப்படுத்த வேண்டும். இறந்த மாடுகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், எனக்கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கோபியில் ஆர்ப்பாட்டம் நடந்தது. நம்பியூர் ஒன்றிய தலைவர் சிதம்பரம் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் துளசிமணி முன்னிலை வகித்தார். மாநில நிர்வாகி பழனிசாமி, கோரிக்கையை விளக்கி பேசினார். நம்பியூர் ஒன்றிய துணை செயலாளர் சுப்பிரமணியம், கோபி வட்ட செயலாளர் பரமேஸ்வரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**சாண எரிவாயு பயன்பாட்டால் சுற்றுச்சூழல் மாசு குறைவு**

பந்தலூர் :"சாண எரிவாயு அமைப்பின் மூலம், சுற்றுச்சூழல் மாசுபடுவது வெகுவாக குறைந்துள்ளது' என, தெரிவிக்கப்பட்டது.
பந்தலூர் அருகே ஏலமன்னா சி.டி.ஆர்.டி. நிறுவனம், "ஏர்பஸ்' நிறுவனம் இணைந்து, பந்தலூர் தாலுகாவில் உள்ள பழங்குடியின கிராமங்களில் சாண எரிவாயு திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. இதன் இரண்டாம் கட்ட பணி அய்யன்கொல்லி நெல்லிமாடு பழங்குடியினர் கிராமத்தில் துவக்கப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் வாசுதேவன் வரவேற்றார். சி.டி.ஆர்.டி. செயல் இயக்குனர் ரெங்கநாதன் பேசுகையில்,""பழங்குடியின விவசாயிகள் தங்கள் விளை நிலங்களை விற்பனை செய்துவந்த நிலையை மாற்றி, தற்போது 450 ஏக்கர் பரப்பளவில் பல்வேறு கிராமங்களிலும் தேயிலை விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான எங்கள் அமைப்பின் சார்பில், 9 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது பழங்குடியின விவசாயிகள் மத்தியில் சில்வர் டிப்ஸ் தேயிலை தயாரிக்கும் பணியும் மேற்கொள் ளப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் சுற்றுச்சூழல் மாசடைவதை தடுக்கும் வகையில் சாண எரிவாயு திட்டம் செயல்படுத்தப்பட்டது. 6 கிராமங்களில் 50 யூனிட்கள் அளவுக்கு, தலா 1.25 லட்சம் ரூபாய் மதிப்பில் இந்த அமைப்பு நிறுவப்பட்டுள் ளது. சாண எரிவாயு மூலம் விறகு வெட்டுவதும் தடுக்கப்படுகிறது," என்றார்.
நிகழ்ச்சியை சி.டி.ஆர். டி., தொடர்பு அலுவலர் தீபக்பன்சால் துவக்கி வைத்தார். ஏர்பஸ் இந்திய இயக்குனர் சூரஜ், ஆலோசகர் மைக்கேல் ஜெவில்சன், சி.டி. ஆர்.டி. இணை இயக்குனர் விஜயராஜு முன்னிலை வகித்தனர்.
ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு கடன் உதவி**

மஞ்சூர்:மூரட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு 25 லட்சம் ரூநாய் கடன் வழங்கப்பட்டது. மூரட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 800க்கு மேற்பட்ட விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். விவசாயிகளுக்கு கடன் வழங்கும் நிகழ்ச்சி வங்கி

வளாகத்தில் நடந்தது. மூரட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் தலைவர் ராஜ்குமார் வரவேற்றார்.

மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் வாசுதேவன், தனி மேலாளர் தேவராஜன் முன்னிலை வகித்தனர். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ஆல்துரை விவசாயிகளுக்கு 25 லட்சம் ரூபாய் கடன் வழங்கினார்.

**"மூலிகைகளை மாணவர்கள் அறிந்துகொள்வது அவசியம்'**

ஊட்டி :"நீலகிரி வனங்களில் உள்ள மூலிகை தாவரங்கள் குறித்து, மருத்துவ மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்' என, கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. ஊட்டி ஜெ.எஸ்.எஸ்., பார்மசி கல்லூரியில், 52வது தேசிய பார்மசி வார விழா கருத்தரங்கு, நேற்று துவங்கியது. கல்லூரி பார்மகாலஜி துறை தலைவர் டாக்டர் சதீஷ்குமார் வரவேற்றார். கல்லூரி துணை முதல்வர் டாக்டர் இளங்கோ தலைமை வகித்தார். இந்திய மருத்தாக்கியல் சங்க நீலகிரி கிளை தலைவர் பேராசிரியர் டாக்டர் துரைசாமி துவக்க உரையாற்றினார்.

கவுரவ விருந்தினராக பங்கேற்ற, கோவை சரக வன பாதுகாவலர் கந்தசாமி பேசியதாவது;

"மருந்தியளாளர் சிறந்த சுகாதாரப் பணியாளர்' என்ற மைய கருத்தை வைத்து, இக்கருத்தரங்கு நடக்கிறது. உலகில் உள்ள சுற்றுச்சூழல் மண்டலங்களில், நீலகிரி வன உயிரின மண்டலம், தனித்துவம் வாய்ந்தது. மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய இந்த மலைத் தொடரில், அரிய வகை மூலிகை தாவரங்கள் உள்ளன. கடந்த, 1,000 ஆண்டுகளுக்கு முன், வனங்களில் இருந்து கிடைக்கும் மூலிகை தாவரங்களில் இருந்து தான் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. குறிப்பாக, சித்தா மருத்துவத்தில் தாவர, செடியினங்கள் பங்களிப்பு அதிகம்; தற்போது, 40 சதவீத மருந்துகள், வனம் மற்றும் அதை சார்ந்துள்ள பகுதிகளில் இருந்து கிடைக்கும் தாவர, செடியினங்களில் இருந்து தயாரிக்கப்படுகிறது.

உணவு பாதுகாப்பு என்பது வனத்தை சார்ந்தே உள்ளது என்பதால், வனம் மற்றும் வன விலங்குகளை பாதுகாப்பது அவசியம். ஊட்டி தொட்டபெட்டாவில் மூலிகை தாவர மையம் அமைக்கப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் மருந்தாளுனர் மாணவர்கள், வனங்களில் உள்ள மூலிகை தாவர, செடியினங்களை நேரில் பார்த்து, அவற்றின் முக்கியத்துவத்தை தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு, கந்தசாமி பேசினார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, அமெரிக்கா "லா டிரோபே' பல்கலை கழக விவசாய அறிவியல் துறை தலைவர் டாக்டர் மார்க்கண்டேய ஜாய்ஸ், சென்னை "டயாபடீஸ் கேர்' விற்பனை தலைவர் சக்தி வடிவேல் பேசினர்.

கல்லூரி பார்மசி துறை தலைவர் டாக்டர் பொன்னுசங்கர் நன்றி கூறினார்.

இக்கருத்தரங்கு, வரும் 7ம் தேதி வரை நடக்கிறது.

**தஞ்சையில் இலவச மீன்வளர்ப்பு பயிற்சி: டிச.,7ல் நேர்முகத்தேர்வு**

தஞ்சாவூர்: "தஞ்சையில், ஐ.ஓ.பி., கிராமிய பயிற்சி மையத்தில் இலவச மீன் வளர்ப்பு பயிற்சி வரும், 9ம் தேதி துவங்குகிறது. இதற்கு நேர்முகத்தேர்வு, 7ம் தேதி நடக்கிறது. இதில், ஆர்வம் உள்ளவர்கள் பங்கேற்கலாம்' என, பயிற்சி மைய இயக்குனர் வெற்றிச்செல்வன் கூறினார்.

தஞ்சை மருத்துவக்கல்லூரி ரோட்டிலுள்ள ஈஸ்வரி நகரில் ஐ.ஓ.பி., கிராமிய சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இம்மைய இயக்குனர் வெற்றிச்செல்வன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தஞ்சையில், ஐ.ஓ.பி., கிராமிய சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையத்தில் மீன் வளர்ப்பு பயிற்சி வரும், 9ம் தேதி துவங்குகிறது. இதற்கு முன்னதாக, மீன் வளர்ப்புக்கு ஏற்ற நில வசதி, தண்ணீர் வசதி உடையவர்கள், வரும் 7ம் தேதி (சனிக்கிழமை) காலை, 8.30 மணிக்கு பயிற்சி மையத்தில் நடக்கும் நேர்முகத்தேர்வில் பங்கேற்க வேண்டும்.பயிற்சி காலத்தில் மதிய உணவு மற்றும் தேவையான பயிற்சி பொருட்கள் இலவசமாக வழங்கப்படும். அரசு திட்டத்தில் மானியத்துடன் வங்கி கடன் பெற்று மீன் பண்ணை அமைக்க தேவையான

வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கப்படும்.
தஞ்சை மாவட்டத்திலுள்ள, 20 வயதுக்கு மேற்பட்டோர், கல்வி சான்றிதழ், மாற்று சான்றிதழ், ரேஷன்கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, 3 ஸ்டாம்ப் சைஸ் ஃபோட்டோ ஆகியவற்றை நேர்முகத்தேர்வுக்கு கொண்டு வர வேண்டும்.இவ்வாறு அவர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## 2,200 டன் நெல் மூட்டைகள் அரவைக்கு அனுப்பிவைப்பு

தஞ்சாவூர்: தஞ்சையில், குறுவை பருவத்தில் அறுவடையான 2,200 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக செங்கல்பட்டுக்கு, தஞ்சையிலிருந்து சரக்கு ரயில் மூலம் நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் அனுப்பி வைத்தனர்.
தமிழகத்தில் வேளாண்மை தொழில் மூலம் நெல் உற்பத்தி அதிகளவில் தஞ்சை உள்பட டெல்டா மாவட்டங்களில் நடந்து வருகிறது. இப்பகுதியில் விளையும் நெல்மூட்டைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் நேரடியாக கொள்முதல் நிலையங்களுக்கு கொள்முதல் செய்யப்பட்டு, பிற பகுதிகளிலுள்ள அரிசி ஆலைகளுக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. தஞ்சை உள்பட டெல்டாவில் சம்பா சாகுபடி பணிகள் தற்போது, தீவிரமாக நடந்து வருகிறது. குறுவை அறுவடை பணிகள் நிறைவை எட்டியுள்ளதால், நெல் மூட்டைகள் கொள்முதல் நிலையங்களில் சேமிப்பு செய்யப்பட்டும், வெளி மாவட்டங்களுக்கு அரவைக்கு அனுப்பப்பட்டும் வருகிறது. இதன்படி, தஞ்சையில் இருந்து ரயில் மூலம் 1,114 டன் நெல் மூட்டைகள் சென்னைக்கு அரவைக்காக ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டது.இதைத்தொடர்ந்து, தஞ்சையில் இருந்து செங்கல்பட்டுக்கு மேலும் 2,200 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக சரக்கு ரயில் மூலம் கடந்த 3ம் தேதி அனுப்பி வைக்கப்பட்டது. இப்பணியை தஞ்சை மண்டல நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் மேற்பார்வையிட்டு, ஏற்பாடுகளை செய்தனர். தஞ்சாவூர்: தஞ்சையில், குறுவை பருவத்தில் அறுவடையான 2,200 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக செங்கல்பட்டுக்கு, தஞ்சையிலிருந்து சரக்கு ரயில் மூலம் நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் அனுப்பி வைத்தனர்.தமிழகத்தில் வேளாண்மை தொழில் மூலம் நெல் உற்பத்தி அதிகளவில் தஞ்சை உள்பட

டெல்டா மாவட்டங்களில் நடந்து வருகிறது. இப்பகுதியில் விளையும் நெல்மூட்டைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் நேரடியாக கொள்முதல் நிலையங்களுக்கு கொள்முதல் செய்யப்பட்டு, பிற பகுதிகளிலுள்ள அரிசி ஆலைகளுக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. தஞ்சை உள்பட டெல்டாவில் சம்பா சாகுபடி பணிகள் தற்போது, தீவிரமாக நடந்து வருகிறது. குறுவை அறுவடை பணிகள் நிறைவை எட்டியுள்ளதால், நெல் மூட்டைகள் கொள்முதல் நிலையங்களில் சேமிப்பு செய்யப்பட்டும், வெளி மாவட்டங்களுக்கு அரவைக்கு அனுப்பப்பட்டும் வருகிறது. இதன்படி, தஞ்சையில் இருந்து ரயில் மூலம் 1,114 டன் நெல் மூட்டைகள் சென்னைக்கு அரவைக்காக ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, தஞ்சையில் இருந்து செங்கல்பட்டுக்கு மேலும் 2,200 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக சரக்கு ரயில் மூலம் கடந்த 3ம் தேதி அனுப்பி வைக்கப்பட்டது. இப்பணியை தஞ்சை மண்டல நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் மேற்பார்வையிட்டு, ஏற்பாடுகளை செய்தனர்.

**இலைப்புள்ளி, சிவப்பு இலைநோயிலிருந்து பருத்தியை காப்பாற்ற அதிகாரி "அட்வைஸ்' :** பெரம்பலூர்: பருத்தியை இலைப்புள்ளி நோய் மற்றும் சிவப்பு இலை நோயிலிருந்து காப்பாற்ற விவசாயிகள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை குறித்து வேளாண் துறை இணை இயக்குனர் (பொ) கனகசபை தெரிவித்துள்ளதாவது: ஆல்டர்நேரியா இலைப்புள்ளிநோய், ஆல்ட்டர்நேரியா மேக்ரோஸ்போரா என்ற பூசணத்தால் ஏற்படுகிறது. இது காற்றின் மூலம் பரவும் தன்மை உடையது. இப்பகுதியில் இலைப்பேன் தாக்குதல் அதிகமாக முன் காணப்பட்டதாலும், நுண்ணூட்டசத்து பற்றாக்குறை மற்றும் தொடர்ச்சியான வறட்சி அதைத்தொடர்ந்து கனமழை போன்ற காரணிகள் ஆல்டர்நேரியா இலைப்புள்ளிநோய் தாக்குதல் அதிக அளவில் பரவுவதற்கு வழி வகுத்துள்ளது. இந்நோயினை கட்டுப்படுத்த பூசணக் கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை, 10 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும். டெபுகோணசோல்- ஓர்

ஏக்கருக்கு, 200 மில்லி லிட்டர் அளவிலும் (அல்லது) ட்ரைபிளாக்கிஸ்டரோபின் மற்றும் டெபுகோணசோல் ஒரு ஏக்கருக்கு, 200 கிராம அளவிலும் (அல்லது) புரப்பிகோணசோல் ஓர் ஏக்கருக்கு, 200 மில்லி லிட்டர் அளவிலும் (அல்லது) மான்கோசப் - ஒரு ஏக்கருக்கு, 400 கிராம் அளவிலும் அல்லது குளோரோத்தலோனில் ஒரு ஏக்கருக்கு, 400 கிராம் அளவிலும் தெளிக்க வேண்டும்.
அதுபோல் ஆய்வு செய்யப்பட்ட ஒருசில வயல்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈதாக்குதலும் இருப்பது கண்டறியப்பட்டது.
இதை கட்டுப்படுத்த தையோமீத்தாக்சும் ஒரு ஏக்கருக்கு, 50 கிராம் அளவிலும் (அ) அசிட்டாமிபிரைட் ஒரு ஏக்கருக்கு, 100கிராம் அளவிலும் (அ) டைபென்த்தயூரான் ஒரு ஏக்கருக்கு, 100 கிராம அளவிலும் (அல்லது) பிப்ரோனில் 5% இசி ஒரு ஏக்கருக்கு 200மி.லி அளவிலும் (அ) பிப்ரோனில் 80 டபுள்யூடிஜி - ஒரு ஏக்கருக்கு, 20கிராம் என்ற அளவில் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லியை மேற்கூறிய ஏதேனும் ஒரு பூசணக்கொல்லியுடன் ஒட்டும் திரவம் ஒரு லிட்டருக்கு ஒரு மில்லி லிட்டர் கலந்து தெளிக்க வேண்டும்.
பருத்தி வயலில் சிவப்பு இலை நோயின் தாக்குதலும் அதிகமாக காணப்படுகிறது.
இந்நோயானது மக்னீசியம் என்ற நுண்ணூட்டசத்து பற்றாக்குறையினால் ஏற்படுகிறது. இதனால் இலைகள் சிவப்பு நிறமாகமாறி பின்னர் காய்ந்துவிடும்.
இதைக் கட்டுப்படுத்த, மக்னீசியம் சல்பேட் ஒரு லிட்டருக்கு, 5 கிராம் என்ற அளவிலும் மற்றும் யூரியா ஒரு லிட்டருக்கு 10கிராம் என்ற அளவிலும் தெளிக்க வேண்டும். 19:19:19 என்ற நீரில் கரையும் உரத்தினை ஒரு லிட்டருக்கு 10கிராம் என்ற அளவில் தெளிப்பதன் மூலம் செடியின் மறு வளர்ச்சியை அதிகப்படுத்தலாம்.
அதைதொடர்ந்து நீரில்கரையும் உரமான பொட்டாசியம் நைட்ரேட்டை (மல்டி கே :13-0-45) லிட்டருக்கு 10 கிராம்(1%) என்ற அளவில் தெளிக்க வேண்டும். நீரில் கரையும் உரங்களை தனியாகவும், பூச்சிமற்றும் பூசணகொல்லிகளைதனியாகவும் தெளிக்கவேண்டும் என்பதை விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

**வாழைகள், அரசாணிக்காய் நாசம் கண்டியூர் பகுதியில் காட்டு யானைகள்அட்டகாசம்**

மேட்டுப்பாளையம், : மேட்டுப்பாளையம் கண்டியூர் பகுதியில் வாழை, அரசாணிக்காய் தோட்டங்களை
யானைகள் துவம்சம் செய்து வருகின்றன.
மேட்டுப்பாளையம்அருகே உள்ள நெல்லிமலை வனத்தில் முகாமிட்டு இருக்கும் 5 காட்டு யானை கள் சில மாதங்களாக குரும்பனூர்,தாசம்பாளையம்உள்ளிட்ட23 கிராமப்பகுதிகளுக்கு தினமும் வந்து பயிர்களை அழித்து துவம்சம் செய்வதில் ஈடுபட்டுள்ளன.
விவசாயிகளும் வனத்துறையினரும் பட்டா சு வெடித்து விரட்டினாலும் காட்டுக்குள் செல்லாமல் அதே பகுதியில் உள்ள மற்ற கிராம பகுதிக்கு செல்கின்றன.இதனால், பயிர்கள் நாசமாகி விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்க நேரிடுகிறது.இந்த 5 யானை களும் கடந்த 3 நாட்களாக கண்டியூர் பகுதியில் முகாமிட்டு அட்டகாசம் செய்து வருகின்றன. அதே பகுதியைசேர்ந்த திருமயம், லோகநாதன், துரைசாமி மற்றும் செல்வாநகரைசேர்ந்த பொன்னுசாமி, செந்தில்குமார் ஆகிய விவசாயிகளின் தோட்டங்களில் வாழை, அரசாணிக்காய் பயிர்களை அழித்து வருகின்றன. மாங் கரை பகுதியில் 10க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை சேதப்படுத்தின.
23 கிராமங்களின் விவசாயிகள் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பாண்டுரங்கன் கூறுகையில், 'கா ட்டு யானைகள் தொட ர்ந்து அட்டகாசம் செய்கின்றன. பல போராட்டம் நடத்தியும் அவைகளை முழுமையாக விரட்டும் நடவடிக்கையில் வனத்துறையினர் ஈடுபடுவதில்லை. குரும்பனூர், தாசம்பாளையம் பகுதிக்கு வரும்

யானைகளை விரட்டும்போது கண்டியூர் பகுதிக்கு வந்து அங்கும் பயிர்களை சேதப்படுத்துகின்றன.

பொதுமக்கள் மிகுந்த அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளது.

தொடர்ந்து உயிர்சேதம், பயிர் சேதம் ஏற்படுத்தி வரும் காட்டு யானைகளை கும்கிகள் மூலமோ அல்லது வேறு வழிமுறை மூலமோ நிரந்தரமாக விரட்டி அடிக்க வேண்டும்.

கிராம மக்கள், விவசாயிபள், வனத்துறையினர் பங்கேற்கும் முத்தரப்பு கூட்டத்தை நடத்தி முறையான தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு பாண்டுரங்கன் தெரிவித்தார்.

**உச்சத்தில் தேங்காய் விலை**

கோவை, : தேங்காய் விலை உச்சத்தில் நீடிக்கிறது. 3 மாதமாகியும் விலை குறையாமல் இருப்பதால் மக்கள் தவிப்படைந்துள்ளனர்.

தமிழகத்திலேயே கோவை மாவட்டத்தில் தான் தேங்காய் உற்பத்தி அதிகமாக நடக்கிறது. பொள்ளாச்சி, ஆனைமலை, கிணத்துக்கடவு, மதுக்கரை உட்பட பல்வேறு ஒன்றியங்களில் 89,550 எக்டரில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளது. கடந்த ஆண்டு தேங்காய் விலை 7 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை இருந்தது. தேங்காய் விலை வீழ்ச்சியால் தென்னை விவசாயிகள் தவிப்படைந்திருந்தனர். நடப்பாண்டில், ஜனவரி முதல் ஜூன் தேங்காய் விலை 10 ரூபாய் முதல் 13 ரூபாய் வரை இருந்தது.

கடந்த 3 மாதமாக தேங்காய் விலை 18 ரூபாய் வரை 30 ரூபாய் வரை உயர்ந்தது. கடந்த ஆண்டில், கடும் வறட்சியால் 3மார் 1 லட்சம் தென்னை மரங்கள் காய்ந்தது. நடப்பாண்டில் தென்மேற்கு பருவ மழை போதுமான அளவு பெய்தது. இருப்பினும் தேங்காய் விளைச்சல் 30 முதல் 35 சதவீதம் குறைவாக இருப்பதாக தெரியவந்துள்ளது. பற்றாக்குறை காரணமாக தேங்காய் விலை உச்சத்தில்

இருப்பாக தெரிகிறது. நடப்பாண்டில் தேங்காய் விலை குறையாது, ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் தேங்காய் விலை சற்று குறையும் என வேளாண் மார்க்கெட் கமிட்டியினர் எதிர்பார்த்துள்ளனர். **வெளிநாட்டு பறவைகள் குவியும் நாங்குநேரி பெரியகுளத்தில் சரணாலயம் சமூக ஆர்வலர்கள் எதிர்பார்ப்பு**

நாங்குநேரி, : நாங்குநேரி பெரியகுளம் பகுதிக்கு பட்டைத்தலை வாத்துகள் உட்பட பல்வேறு வகையான வெளிநாட்டு பறவை இனங் கள் அதிகளவில் வருவதால் அப்பகுதியை பறவைகள் சரணாலயமாக அறிவிக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

நாங்குநேரி பெரியகுளத்தில் ஏராளமான பட்டைத்தலை வாத்துகள் இரை தேடி வருகின்றன. பல்வேறு வாத்து வகைகளில் ஒன்றான பட்டத்தலை வாத்துகள், நாங்குநேரி பெரிய குளத்தில் கூட்டம் கூட்டமாக வந்துள்ளன. தலை மற்றும் முதுகு பகுதி யில் பட்டை போன்ற அமைப்பை பெற்றுள்ளதால் இதனை இவ்வாறு பெய ரிட்டு அழைக்கின்றனர்.

குளம், குட்டை ஓரங்களில் முளைத்து நிற்கும் புல் மற்றும் இளஞ்செடிகளின் தளிர்களை உண்டு வாழும் இந்த வகை வாத்துக்கள் ஆசியாவின் பல்வேறு நாடு களில் வசித்து வருகின் றன. தற்போது, நாங்குநேரி பெரியகுளத்திற்கு வரும் வெளி நாட்டு பறவைகளுடன் பட்டைத்தலை வாத்துகளும் அடக்கம். அதனால் நாங்கு நேரி பெரியகுளத்தில் சரணாலயம் அமைக்க வேண் டும் என இயற்கை ஆர்வலர் கள் வலியுறுத்தியுள்ளனர்.

நாங்குநேரி பெரியகுளம் சுமார் 10 கிமீ சுற்றளவு கொண்டதாகும். சுமார் 50 ஆயிரம் ஏக்கருக்கும் அதிக மான பாசன நிலங்கள் இக்குளத்தின் மூலம் பயனடைந்து வருகிறது. பச்சையாற்று பாசனம் மற்றும் மழை காலங்களில் வரும் தண்ணீர் ஆகியவற்றை நீர் ஆதாரமாக கொண்டுள்ள இக்குளத்தில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் மே மாதம் வரை தண்ணீர் இருக்கும். தண்ணீர் வற்றிய பின்னரும் இக்குளத்தினுள் அமைக்கப்பட்டுள்ள ஜீயர் ஊற்று தெப்பக்குளம், மற்றும் குட்டைகளில் உள்ள தண்ணீரை ஆண்டின் இதர மாதங்களில் அப்பகுதி மக்கள் மற்றும் விலங்குகள் பயன்படுத்துவது வழக்கம். இதனால் ஆண்டின்

பெரும்பாலான நாட்களில் நீர்ப்பறவைகள் இக்குளத்தினுள் தங்கி இனப் பெருக்கம் செய் யும் நிலைக்கு மாறி வருகிறது.

கடந்த சில ஆண்டுகளாக எடுக்கப்பட்ட பறவைகள் கணக்கெடுப்பில் கிடைத்த தகவலின்படி 18 வகையான அரியவகை பறவைகள் வசிக்கின்றன என்பது உறுதி செய்யப்பட்டது. அதில் குறிப் பாக ரஷ்யாவைப் பூர்வீகமாகக் கொண்ட காமன்போச்சாட், பின்டேல் போன்றவைகளுடன், நத்தைக்கொத்தி, செங்கால் நாரை, புள்ளி மூக்குத் தாரா, கருப்பு அரிவாள் மூக் கன், வெள்ளை அரிவாள் மூக் கன், பட்டைத்தலை வாத்து கள், நீல வாத்துகள், நீல மீன்கொத்தி, கரும்புள்ளி மீன்கொத்தி உள்பட 18வகை யான பறவைகள் அதிகமாக உள்ளன என கணக்கெடுப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சீனா, இலங்கை, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, தாய்லாந்து, இந்தோனே சியா, உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் பூநாரை போன்ற பல்வேறு நீர்வாழ் பறவையினங்கள் குளத்தில் குறைந்த அளவு தேங்கியுள்ள தண்ணீரில் இரைதேடி வருகின்றன. கடந்த ஆண்டு குளம் நிரம்பாததால் இரை கிடைக்கா மல் பறவைகள் அங்கிருந்து வெளியேறின.

இந்நிலையில் தற்போது பெய்து வரும் மழையால் குளங்களில் நீர் இருப்பு மிகவும் குறைவாக உள்ளது. இதனையடுத்து நாங்குநேரி பெரிகுளத்தின் நீர்ப்பிடிப்பை ஒட்டியுள்ள பகுதில் பறவைகள் சரணாலயம் அமைக்க வேண்டும் என அப்பகுதி இயற்கை ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ள னர். இங்கு பறவைகள் இனப்பெருக்கம் செய்ய ஏதுவாக போதிய தங்குமிட வசதிகள் இல்லை. பறவைகளுக்கு செயற்கை வாழிட வசதிகள் கிடைக்கும் வகை யில் நீண்ட காலம் பயன் தரும் மரக்கன்றுகளை நடவு செய்திட நடவடிக்கைஎடுக்க வேண்டும். நான்கு வழி சாலையை ஒட்டி அமைந்துள்ள நாங்குநேரி பெரிய குளம் பகுதியில் பறவைகள் சரணாலயம் அமைக்கப் படும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் அங்கு சுற்றுலத் தலம் அமையவும் வாய்ப்புள்ளது. மேலும் இதன் மூலம் அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக் கும் . எனவே மாவட்ட நிர்வாகம் நாங்குநேரி பெரியகுளத்தில் பறவைகள சரணாலயம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

**அனைத்து நீர்பாசன திட்டங்களை நிறைவேற்ற கொமதேக வலியுறுத்தல்**

ஈரோடு, : அனைத்து நீர்பாசன திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி(கொமதேக) மாநில பொது செயலாளர் ஈஸ்வரன் தெரிவித்தார்.

கொமதேக மாநாட்டு விளக்க கூட்டம் மொடக்குறிச்சி அடுத்த சோளங்காபாளையத்தில் நடந்தது. கூட்டத்திற்கு மாநில தலைமை நிலைய செயலாளர் சூரியமூர்த்தி தலைமை வகித்தார். கெடுமுடி ஒன்றிய செயலாளர் சண்முகம் வரவேற்றார்.

கூட்டத்தில் கொமதேக மாநில பொது செயலாளர் ஈஸ்வரன் பேசியதாவது: ஈரோட்டில் பிற மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமானோர் பணிபுரிவதால் இங்கு சென்னையைப் போல் 2 மணி நேரம் மட்டுமே மின்வெட்டை அமல்படுத்த வேண்டும். உயர்நீதிமன்ற கிளையை கோவையில் திறக்க வேண்டும். பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றி கொங்கு நாட்டின் நீர் பிரச்னையை தீர்க்க அரசு முன் வர வேண்டும். கொங்கு நாட்டின் தேவையை முன்னைத்து அனைத்து நீர் பாசன திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும். கொங்கு நாட்டு இளைஞர்களுக்கு அரசு வேலைவாயப்பு வழங்க வேண்டும். கொங்கு நாட்டின் உரிமைகள் மறுக்கப்பட்டால் எதிர்காலத்தில் ஜாதிபாகுபாடின்றி அரசியல் கட்சிகளைப் புறக்கணித்து போராட்டம் நடத்தப்படும். கோமாரியால் மாடுகளை இழந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்திற்கு தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் நடவடிக்கை வரவேற்கத்தக்கது.

இவ்வாறு ஈஸ்வரன் பேசினார்.

இறுதியில் மாநில அளவிலான வாலிபால் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஈஸ்வரன் பரிசு வழங்கினார். விழாவில் மாநில அவைத் தலைவர் சென்னியப்பன்,

மாநில பொருளார் பாலு, மாநில துணைப் பொது செயலாளர் சக்தி நடராஜன் உட்பட பலர் பங்கேற்றனர். இறுதியில் இளைஞர் அணியை சேர்ந்த கார்த்திகேயன் நன்றி தெரிவித்தார்.

**தூத்துக்குடியில் புயல் எச்சரிக்கை விசைப்படகுகள் துறைமுகத்தில் நிறுத்தம்**

தூத்துக்குடி, : வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலத்தினால் கடலோர பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. தூத்துக்குடி மாவட்டத் திலும் கடலோர பகுதிகளில் லேசான மழை பெய்து வருகிறது. இந்நிலையில் கடல் காற்று மணிக்கு 50 முதல் 60 கிமீ வேகம் வரையில் வீசக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து விசைப்படகுகள் மீன்பிடிக்க செல்லவேண்டாம் என மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று தூத்துக்குடியில் விசைப்படகுகள் மீன் பிடிக்க செல்லவில்லை. இதனால் 260க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் இன்று (4ம்தேதி) கடற்காற்றின் வேகம் குறைந்து 45 கிமீ முதல் 55 கீமி வரையிலான வேகத்தில் தான் வீசும் என்றும் இன்று மீன் பிடிக்க தடையில்லை என்றும் மீன்துறை அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.  இதனையடுத்து விசைப்படகுகள் இன்று வழக்கம்போல மீன்பிடிக்க செல்கின்றன.

தினத் தந்தி DAILY THANTHI

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஆரணியில் கரும்பு விவசாயிகளுடன் அதிகாரிகள் ஆலோசனை



ஆரணியில் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை சங்க தலைவர் எம்.மதியழகன் தலைமையிலும், துணைத் தலைவர் அசோக் குமார் முன்னிலையிலும் கரும்பு விவசாயிகளுடன் ஆலோசனை கூட்டம் நடை பெற்றது. ஆம்பூர் சர்க்கரை ஆலை கூட்டுறவு சங்க ஆரணி கிளை அலுவலர் எம். வேலாயுதம் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தனி அலுவலர் (பொறுப்பு) கார்த்திகா கலந்து கொண்டு பேசினார்.அப்போது கூட்டுறவு சங்கம் மூலம் தற்போது விவசாயிகளுக்கு கரும்பு அறுவடை இயந்திரம் மூலம் கரும்பு வெட்ட அனுமதி வழங்கப்படுகிறது. இதனால் ஆள் பற்றாக்குறையும், கரும்பு வெட்டும் நேரம் குறைக்கப்படும் என்று பேசினார்.

தொடர்ந்து முள்ளிப்பட்டு ஊராட்சியில் கரும்பு இயந்திரம் மூலம் வெட்டப்படு வதை விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் கூட்டத்தில் இயக்குனர்கள் ராஜேந்திரன், சின்னத்துரை, கோபி, புஷ்பநாதன் உள்பட கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**ஒரு டன் கரும்புக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும்**



கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும் என்று போளூரில் நடந்த குறைதீர்வு கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

<u>குறைதீர்வு கூட்டம்</u>

போளூர் தாலுகா அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் மாவட்ட வினியோக அதிகாரி கிருபானந்தம் தலைமையில் நடைபெற்றது. தாசில்தார் கிருஷ்ண மூர்த்தி, சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாலுகா வினியோக அதிகாரி கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். கூட்டத்தில் விவசாயிகள் பாலமுருகன், ஏழுமலை, செல்வம் உள்ளிட்ட பலர் பேசினார்கள்.

அவர்கள் பேசியதாவது:–

<u>ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும்</u>

கரும்பு டன் 1–க்கு ரூ.4 ஆயிரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மைய கூட்டுறவு வங்கிகள் தனி நபர் கடன் வழங்க வேண்டும். அனந்தபுரம் பகுதியில் மின் வாரிய அதிகாரி தங்குவதில்லை.

இறவை மணிலா பயிருக்கு ஜிப்சம் உரம் வழங்க வேண்டும். காளசமுத்திரத்தில் இருளர் இனத்தவர்களுக்கு 35 கிலோ அரிசி வழங்க வேண்டும். எல்லா கிராமங்களிலும் ஏரிகள் தூர்வார வேண்டும்.

ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். போளூர் நகரில் கொசுத்தொல்லை அதிகமாக இருக்கிறது. கொசுவை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கண்டவாறு விவசாயிகள் பேசினர். முடிவில் எழுத்தர் மனோகரன் நன்றி கூறினார்.

<u>வந்தவாசி</u>

வந்தவாசி தாலுகா அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார். தாசில்தார் ராஜலட்சுமி, சமூக பாதுகாப்பு தாசில்தார் அற்புதம், வட்டவினியோக அலுவலர் பரதேஸ்வரசக்கரவர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வருவாய் ஆய்வாளர் தியாகராஜன் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் விவசாய சங்கங்களை சேர்ந்த தலைவர்கள் அரிதாசு, பாண்டுரங்கன், முருகேசன், மருதாடு மணி உள்பட விவசாயிகள் பலரும் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகள் குறித்து விளக்கி பேசினர். பல்வேறு துறை அதிகாரிகள் கிராம நிர்வாக அலுவலர் அசோக்குமார், விவசாயதுறை அலுவலர் குமார் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு விளக்கம் அளித்தனர்.

**மூலனூர் சுற்று அழிவின் விளிம்பில் கண்வலி கிழங்கு விவசாயம் விவசாயிகள் கவலை**



திருப்பூர்,

மூலனூர் மற்றும் சுற்று வட்டரப்பகுதிகளில் இடைத்தரகர்களின் ஆதிக்கத்தால் கண்வலி விதைக்கு தொடர்ந்து உரிய விலை கிடைக்காததால் கண்வலி மூலிகைப்பயிர் விவசாயம்

<u>மெல்ல அழிந்து வருகிறது.</u>

திருப்பூர் மாவட்டம் மூலனூர், தாராபுரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், மார்க்கம்பட்டி மற்றும் சுற்று வட்டரப்பகுதிகளில் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக சுமார் பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் கண்வலி மூலிகைப்பயிர்

<u>சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.</u>

இந்தியாவிலேயே மேற்கண்ட பகுதிகளில் மட்டுமே கண்வலிப்

பயிருக்கேற்ற மண்வளம் மற்றும் தட்ப வெப்பம் நிலவுவதால் ஆண்டுதோறும் விவசாயிகள் விவசாயத்தின் பரப்பளவை அதிகரித்து வருகிறார்கள். இங்கு விளையும் கண்வலி விதைகளை

தனியார் நிறுவனங்கள் கொள்முதல் செய்து ஆண்டு தோரும் சுமார் 300 டன் அளவுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தனர்.

இந்த மூலிகை விதை ஏற்றுமதியால் அரசுக்கு பெருமளவில் அந்நியச்செலாவணி கிடைத்து வருகிறது. தொடக்கத்தில் மும்பை, டெல்லி உட்பட்ட நகரங்களிலிருந்து தனியார் நிறுவனங்கள் நேரடியாக வந்து நல்ல விலை கொடுத்து விதைகளை கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்ததால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக வெளிநிறுவனங்களின் நேரடி கொள்முதலை தவிர்த்து இடைத்தரகர்கள் கூட்டணி அமைத்து

விவசாயிகளிடம் மிகக்குறைந்த விலையில் விதைகளை கொள்முதல் செய்து வருகிறார்கள். இதனால் கிலோ 2000 வரை

விற்பனையான விதைகள் கடந்த ஆண்டு பருவத்தில் 700 வரையே விற்பனையானது. இதனால் கண்வலி பயிரிட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 2 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டது.

இதனால் பாதிப்படைந்த விவசாயிகள், தமிழ்நாடு மூலிகை விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் அரசே கண்வலி விதைக்கு

உரிய விலை நிர்ணயம் செய்ய வேண்டும். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் அரசே விதைகளை நேரடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை அரசுக்கு பலமுறை வலியுறுத்தி வந்தன. ஆனால் அரசு சார்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என விவசாயிகள் கண்ணீர் வடிக்கிறார்கள்.

கடந்த ஆண்டு விவசாயிகள் ஒரு கிலோ ரூ.500–கொள்முதல் செய்யப்பட்ட இந்த கண்வலி கிழங்கு இந்த ஆண்டு ரூ.50–க்கு கூட கேட்பதற்கு ஆள் இல்லாத நிலை ஏற்பட்டு உள்ளது. தற்போது இந்த ஆண்டு ஆடி பட்டம் பயிரிடும் சீசன் தொடங்கி உள்ள நிலையில் கண்வலி பயிரிட விவசாயிகள் பெரும் தயக்கம்

காட்டி வருகின்றனர்.

தமிழ்நாடு மூலிகை விவசாயிகள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் சுள்ளிப்பெருக்கிபாளையம் லிங்கசாமி கூறியதாவது:–

கடந்த மூன்றுஆண்டுகளாக கண்வலி மூலிகை விதைக்கு உரிய விலை கிடைக்காத காரணத்தால் இந்த ஆண்டும் தொடர்ந்து கண்வலி பயிரிட்டு பெரும் இழப்புகளை அடையாமல் விவசாயிகள் வேறு பயிர்களுக்கு மாறிவருவதாகவும் தற்போது பருவமழை பெய்யாத காரணத்தால் கண்வலி கிழங்குகள் முளைப்பதற்கு லாரிகள் மூலம் தண்ணீரை விலை கொடுத்து வாங்கி பயன்படுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு மேலும் நஷ்டம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளதால் அரசு மேலும் மவுனம் காக்காமல் கண்வலி மூலிகை விதைக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அரசுக்கு அந்நியச்செலாவணியை ஈட்டித்தரும் கண்வலி மூலிகை பயிரை காக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதே ஒட்டு மொத்த விவசாயிகளின் வேண்டுகோளாகும். ஒரு விவசாயி தோட்டத்தில் கருகிப் போன நிலையில் கண்வலி மூலிகை பயிர்.

**பண்ருட்டி அருகே பூச்சி தாக்குதலால் காலிபிளவர், முட்டைகோஸ் பயிர்கள் பாதிப்பு விவசாயிகள் கவலை**



பண்ருட்டி

பண்ருட்டி அருகே பயிரிட்டப்பட்டுள்ள காலிபிளவர் மற்றும் முட்டைகோஸ் பயிர்களில் அதிக அளவில் பூச்சிதாக்கியுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>மானிய விலையில் உரம்</u>

பண்ருட்டி அருகே குச்சிப்பாளையம், கட்டமுத்துபாளையம், பூண்டி, கே.குச்சிப்பாளையம் உள்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் காலிபிளவர் மற்றும் முட்டைகோசினை அதிக அளவில் பயிர் செய்துள்ளனர். தற்போது பருவமழையானது பண்ருட்டி பகுதியில் பரவலாக பெய்து வருவதால் காலிபிளவர், முட்டைகோஸ் ஆகியவை நன்கு செழித்து வளர்ந்து வந்தது. இந்தநிலையில் கடந்த சில நாட்களாக பயிர்களில் பூச்சி தாக்குதல் அதிகரித்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.இதுகுறித்து குச்சிபாளையம் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது.

பொதுவாக குளிர்ச்சியான பகுதிகளில் மட்டுமே முட்டைகோஸ், காலிபளவர் நன்கு விளையும். அதனை கருத்தில் கொண்டே நாங்கள் குளிர்ச்சி காலமான கார்த்திகை மாதத்தில் ஆண்டு தோறும் அதனை பயிர் செய்து, பின்னர் பொங்கலை யொட்டி அறுவடை செய்வோம். மேலும் கடலூர் மாவட்டத்தில் எங்களது பகுதிகளில் மட்டுமே காலிபிளவருக்கும், முட்டைகோசுக்கும் தேவையான வளமான மண்

இருப்பதால், நடப்பாண்டில் அதிகமான பரப்பளவில் அவைகளை என்னை போன்று பல விவசாயிகள் பயிர் செய்து உள்ளனர். இந்த நிலையில் பயிர்களில் பூச்சி தாக்குதல் அதிகரித்து உள்ளதால் செடிகள் அனைத்தும் பாதிப்பு அடைந்து வருகின்றன. பூச்சி மருந்துகள் அடித்தும் பயன் ஏதும் இல்லை. இதன் காரணமாக நாங்கள் செய்வது அறியாது தவித்து வருகின்றோம். வேளாண்மை துறை அதிகாரிகள் பூச்சியினால் பாதிக்கப்பட்ட எங்களது பயிர்களை பார்வையிட்டு தகுந்த ஆலோசனைகளை வழங்க இது வரையில் முன்வரவில்லை. மேலும் மானிய விலையில் உரம், மருந்து பொருட்கள் வழங்கவும் அவர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**ஆவுடையார்கோவில் பகுதி விவசாயிகள் மகசூல் இழப்பை சரிகட்ட பயிர் காப்பீடு செய்யலாம் அதிகாரி தகவல்**



ஆவுடையார்கோவில்,

ஆவுடையார்கோவில் பகுதியில் உள்ள விவசாயிகள், நெற்பயிரில் மகசூல் இழப்பை சரி கட்ட பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தெரி வித்துள்ளார்.

இது குறித்து ஆவுடையார் கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் அடைக்கப்பன் வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித் துள்ளதாவது;-

<u>பயிர் காப்பீட்டுத் திட்டம்</u>

ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் வடகிழக்கு பருவமழையை பயன்படுத்தி சம்பா நெல் சாகுபடி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அவ்வாறு சாகுபடி செய்யும் நெற்பயிரில் எதிர்பாராமல் ஏற்படும் மகசூல் இழப்பை ஈடுகட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத்திட்டம் பயன்படுகிறது. இதில், இயற்கை இடற்பாடுகளான மழை, வெள்ளம், வறட்சி, பூச்சி மற்றும் நோய்களால் ஏற்படும் மகசூல் இழப்பை ஈடுகட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம்.

இத்திட்டதில் பயிர்களை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் (குத்தகைக்கு பயிரிடுவோர் உட்பட) இத்திட்டத்தில் சேரலாம். பயிர் கடன் பெறுபவர்கள் கட்டாயத்தின் அடிப்படையிலும். பயிர் கடன் பெறாதவர்கள் விருப்பத்தின் அடிப்படையிலும் சேரலாம். மேலும் காப்பீடுக்கு தேர்வு செய்யப்பட்ட பயிர் களையும், பகுதிகளையும் வேளாண்மை துறையோ, வங்கியையோ கேட்டு அறிந்து கொள்ளலாம்.

<u>பிரீமியம் தொகை</u>

பயிர் காப்பீடு செய்ய கடைசி நாள் வருகிற 15-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) ஆகும். அந்த தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அல்லது அரசு உடைமையாக்கப்பட்ட வங்கியில் பிரீமியம் தொகை செலுத்தி, வேளாண் காப் பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

மேலும் கடன் பெறாத விவசாயிகளின் விண்ணப் பம் வங்கிகளில் நிராகரிக்கப் பட்டால், இது பற்றி கலெக்டர் மற்றும் வேளா ண்மைத்துறை இணை இயக்குனர் ஆகியோரிடம் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்து ள்ளார்.

**கரூர் மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் விவசாயிகள் கவலை**



கரூர்,

கரூர் மாவட்டத்தில் போதிய மழை இல்லா ததால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்து உள்ளனர்.

<u>விவசாயத்திற்கு பெயர் பெற்ற மாவட்டம்</u>

கரூர் மாவட்டத்தில் காவிரி, அமராவதி, நங்காஞ்சி ஆகிய ஆறுகளும், பல காட் டாறுகளும் ஓடுகின் றன.

ஆரம்ப காலத்தில் விவசாயத்தை மட்டும் கரூர் மாவட்ட மக்கள் நம்பி இருந்தனர். ஆனால் கால போக்கில் கரூரில் பருவ மழை பொய்த்த காரணத்தாலும் தொழில் வளர்ச்சி காரணமாக வும், விவசாயத்தை நம்பி வாழ்ந்த மக்களின் அளவு குறைந்து கொண்டே சென்று விட்டது. கரூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணையின் கீழ் சுமார் 35 ஆயிரம் ஏக்கரும், காவிரி ஆற்றின்கீழ் கரூர் மாவட்ட எல்லையான தவிட்டு பாளையத்தில் இருந்து மருதூர் வரை விவசாயம் சுமார் 55 ஆயிரம் ஏக்கரும் விவசாயம் செய்யப் படுகிறது.

<u>60 சதவீதம்</u>

அமராவதி ஆற்று பாசனத்தை நம்பி மொத்த விளை நிலத்தில் 60 சதவீத நிலப்பரப் பில் மட்டுமே பயிர் சாகுபடி செய்யப்பட்டு உள் ளது. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் நெற் பயிர் விவசாயம் செய்ய ரூ.25 ஆயிரம் வரை செலவு செய்துள்ளனர். இந்த

ஆண்டு மழை பெய்யும் என்ற முழு நம்பிக்கையுடன் கடன் வாங்கி நடவு செய்து உள்ளனர். ஆனால் போதிய மழை இதுவரை பெய்யவில்லை

மழை

கரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு சராசரி மொத்த மழை அளவு 65.5 சென்டி மீட்டர். கடந்த 2012-ம் ஆண்டு பெய்த மழை அளவு 28.5 சென்டி மீட்டர் பெய்து உள்ளது. ஆனால் தற்போது நிலவரப்படி கரூர் பகுதியில் 27. 2 செட்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. கரூர் அமராவதி அணைக்கு பிரதான நீர் ஆதாரமாக விளங்கும் பொள்ளாட்சி, உடுமலைப் பேட்டை ஆகிய பகுதிகளிலும், திருப்பூர் மாவட்ட பகுதியிலும் போதிய அளவு மழை பெய்யாத காரணத்தால் அமராவதி அணைக்கு தண்ணீர் வரத்து குறைவாக உள்ளது. மாவட்டத்தில் அதிக படியாக பஞ்சப்பட்டி, தோகைமலை, பாலவிடுதி ஆகிய பகுதிகளில் இதுவரை தலா 45 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது.

2007-ம் ஆண்டு வெள்ளம்

கரூர் மாவட்டத்தில் கடந்த 2007-ம் ஆண்டு மிகபெரிய வெள்ளச் சேதம் ஏற்பட்டது. அமராவதி ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடியது. இதையடுத்து கடந்த 7 ஆண்டுகளில் அந்த அளவுக்கு மழை பெய்யாததால் தண்ணீர் ஆற்றில் கரைபுரண்டு ஓடவில்லை.

விவசாயிகள் கவலை

தமிழகத்தின் பல பகுதிகளில் இதுரை இல்லாத அளவிற்கு மழை பெய்துள்ளது. குறிப்பாக கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கூட சென்னை மற்றும் சுற்று வட்டார பகுதியில் அதிக அளவு மழை பெய்துள்ளது.இதனால் சென்னை பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனால் கரூர் பகுதியில் மழை குறைவாக பெய்து உள்ளது. கடந்த 2007-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும், 2008-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் அதிக அளவு மழை பெய்தது.அதேபோல் இந்த ஆண்டும் அதிக மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர். நேற்று முன்தினம் தமிழகத்தின் பல பகுதிகளில் அதிக அளவு மழை பெய்து உள்ளது. கரூர் மாவட்டத்தில் குறைந்த அளவு மழையே பதிவாகி உள்ளது. நேற்று முன்தினம் பெய்த மழை அளவு வருமாறு:-

கிருஷ்ணராயபுரம் 32 மில்லி மீட்டரும், மயிலம்பட்டி 25.4 மில்லி மீட்டரும், கரூர் 23.2 மில்லி மீட்டரும், மாயனூர் 24 மில்லி மீட்டரும், தோகைமலை 15.2 மில்லி மீட்டரும், அரவக்குறிச்சி 10.6 மில்லி மீட்டரும். பாலவிடுதி 13.3 மில்லி மீட்டரும் அணை பாளையம் 10.2 மில்லி மீட் டரும், கடவூர் 8. 4 மில்லி மீட்டரும் மழை பெய்து உள்ளது.எப்போதும் அதிக அளவு மழை பெய்யும் பஞ்சப்பட்டி மற்றும் பாலவிடுதிஆகிய பகுதிகளில் 10 மில்லி மீட்டருக்கும் குறைவாக மழை பெய்து உள்ளது.கரூர் மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் நெல், வாழை, கரும்பு பயிர் செய்துள்ள விவசாயிகள் பெரும் கவலையுடன் இருக்கிறார்கள். இன்னும் சில நாட்களில் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் இருந்து வருகிறார்கள். வருண பகவான் தான் கண் திறக்க வேண்டும்.

**ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட்டில் வெங்காயம், தக்காளி விலை குறைவு**



ஒட்டன்சத்திரம்,

ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட்டில் வெங்காயம், தக்காளி விலை குறைந்துள்ளது.

<u>வெங்காய விலை</u>

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட்டில் வெங்காயம், தக்காளி மற்றும் பல காய்கறிகளின் விலை கடந்த வாரத்தைவிட இந்த வாரம் குறைவாக விற்பனையாகிறது. இதற்கு காரணம் காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த வாரம் சின்ன வெங்காயம் ஒரு கிலோ (பழையது) ரூ.60

முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப்பட்டது. வெங்காயம் (பச்சை) ரூ.50 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டது.

இதற்கு காரணம் போதிய மழை இல்லாததால் விளைச்சல் மிகவும் குறைவாக இருந்தது. இதனால் காந்தி மார்க்கெட்டுக்கு வெங்காய வரத்து மிகவும் குறைவாக இருந்தது. இதனால் வெங்காயம் விலை கடுமையாக உயர்ந்து விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது நாற்று வெங்காயம் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் பிற மாவட்டங்களில் கணிசமாக அறுவடை செய்யப்படுகிறது.

இதனால் வெங்காயம் கடந்த வாரத்தைவிட இந்த வாரம் ரூ.20 குறைவாக விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ புதியது ரூ.40 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்படுகிறது. பழையது ஒரு கிலோ ரூ.50 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**<u>தக்காளி</u>**

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், திண்டுக்கல், கோவை, கரூர் மாவட்டங்களில் போதிய மழை இல்லை. மழை பெய்திருந்தால் இந்த நேரம் கார்த்திகை மாதம் முதல் மார்கழி மாதங்களில் நடவு ஆரம்பம் தொடங்கி இருக்கும். இன்னும் போதிய மழை பெய்து நடவு ஆரம்பித்தால் ஒரு கிலோ வெங்காயம் ரூ.100 (பழையது) தாண்டும் என்றனர்.

அதே போல் தக்காளி ஒரு பெட்டி (13 கிலோ) கடந்த வாரம் ரூ.300 வரை விற்பனையானது. ஆனால் இந்த வாரம் அது பாதியாக குறைந்து ஒரு பெட்டி ரூ.150–க்கு விற்பனையாகிறது. இதே போல், பூசணி, மிளகாய், சுரைக்காய் போன்ற மற்ற காய்கறிகளும் விலை குறைந்து விற்பனையாகிறது.

**திருவாரூர் மாவட்டத்தில் விடிய, விடிய பலத்த மழை முத்துப்பேட்டை மீனவர்கள் 2–வது நாளாக மீன்பிடிக்கச் செல்லவில்லை**



திருவாரூர்,

வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை வலுவடைந்து தீவிர காற்றழுத்த தாழ்வு நிலையாக மையம் கொண்டுள்ளதால் திருவாரூர் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு தொடங்கிய மழை விடிய, விடிய நேற்று அதிகாலை வரை நீடித்தது. முத்துப்பேட்டை பகுதி மீனவர்கள் நேற்று 2–வது நாளாக மீன்பிடிக்கச் செல்லவில்லை.

<u>பருவமழை</u>

ஆண்டுதோறும் அக்டோர் மாதம் தொடங்கி டிசம்பர் மாதம் வரை 3 மாதங்கள் வடகிழக்குப்பருவ மழை காலமாகும். இந்தமழைக்காலத்தில் திருவாரூர் மாவட்டத்தில் கனமழை பல நாட்களுக்கு நீடிக்கும். அக்டோபர் மாத இறுதியில் தொடங்கி நவம்பர் மாதம் முடியும் வரை திருவாரூர் பகுதிகளில் பலத்த மழை பெய்யும். ஆனால் இந்த ஆண்டில் (2013) வழக்கத்துக்கு மாறாக நவம்பர் மாதம் முடியும் வரை பருவ மழை அதிகமாக பெய்யவில்லை.

மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட் தண்ணீர் கடைமடை பகுதிகளுக்கு போதிய அளவு வந்துசேராததால் ஏற்கனவே ஏமாற்றத்தில் இருந்த விவசாயிகள் பருவ மழை தீவிரம் அடையாததால் மேலும் ஏமாற்றம் அடைந்தனர். சம்பா பயிர்களுக்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்காமல், அவை பாதிக்கப்படும் அபாயம் இருந்தது. இதனால் கடை மடை பகுதி விவசாயிகள் பருவ மழை எப்போது தீவிரம் அடையும் என்று எதிர்பார்த்து காத்து இருந்தனர்.

<u>விடிய, விடிய மழை</u>

இந்த நிலையில் வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த 1–ந் தேதி முதல் திருவாரூர் மாவட்டத்தில் பருவ மழை தீவிரம் அடைந்துள்ளது. தொடர்ந்து 4–வது நாளாக நேற்றும் திருவாரூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.

வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை வலுவடைந்ததால், நேற்றுமுன்தினம் (4–ந் தேதி) இரவு பலத்த மழை பெய்தது. நேற்றுமுன்தினம் இரவு பெய்ய தொடங்கிய மழை நேற்று அதிகாலை வரை நீடித்தது. காலையில் அவ்வப்போது சாரல் மழை பெய்தது. தொடர்ந்து 4 மணிநேரத்திற்கும் மேலாக குளிர்ந்த காற்றுடன் மழை நீடித்தது. தொடர் மழை காரணமாக திருவாரூர் மாவட்ட பள்ளி, கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டது.

<u>பயிர்களுக்கு நல்லது</u>

திருவாரூர், நன்னிலம், வலங்கைமான், மன்னார்குடி, நீடாமங்கலம், முத்துப்பேட்டை உள்ளிட்ட மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் இரவு விடிய, விடிய மழை பெய்தது. பலத்த மழையாக பெய்யாமல் தொடர்ந்து சாரல் அடித்தபடி பெய்த மழையால், காவிரி டெல்டாவின் கடைமடை பகுதியில் சம்பா நெல் பயிர் செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

இதேபோல் தொடர்ந்து மிதமான மழை நீடிக்க வேண்டும் என்றும் விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். சாரல் மழை கதிர்வரும் நிலையில் உள்ள பயிர்களுக்கும், தூர் கட்டும் நிலையில் உள்ள பயிர்களுக்கும் அதிக பலனை தரும் என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

<u>மீன்பிடிக்கச் செல்லவில்லை</u>

காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக திருவாரூர் மாவட்டத்தின் கடற்கரை பகுதியான முத்துப்பேட்டை கடல் பகுதிகளில் அலைகளின் சீற்றம் கடந்த 2 நாட்கள் அதிகமாக இருந்தது. இதன்காரணமாக தொண்டியக்காடு, மேலதொண்டியக்காடு, கற்பகநாதர்குளம், இடும்பாவனம், தில்லைவிளாகம்,

ஜாம்புவான்ஓடை, துறைகாடு, செம்படவன்காடு, பேட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 3 ஆயிரம் மீனவர்கள் நேற்று 2–வது நாளாக மீன்பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை. இதன்காரணமாக நேற்று முத்துப்பேட்டை பெரியகடைவீதி, ஆசாத்நகர் ஆகிய இடங்களில் உள்ள மீன் சந்தைகள் மீன்வரத்து இன்றி வெறிச்சோடி காணப்பட்டன.

<u>வீடு இடிந்தது</u>

முத்துப்பேட்டை பகுதியில் தொடர் மழை காரணமாக ஓட்டு வீடு ஒன்று இடிந்து விழந்தது. அதிர்ஷ்டவசமாக அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் வெளியூர் சென்றிருந்ததால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. முத்துப்பேட்டை மரைக்காயர் தெருவில் வசிப்பவர் நெய்னாமரைக்காயர் மகன் அய்யூப்கான்(வயது32). ஓட்டு வீட்டில் வசித்து வந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் குடும்பத்துடன் வெளியூர் சென்றிருந்த நிலையில், இரவு முழுவதும் பெய்த மழை காரணமாக ஓட்டு வீடு இடிந்து விழுந்தது. இதில் வீட்டில் இருந்த டி.வி., கிரைண்டர் உள்ளிட்ட பொருட்கள் சேதம் அடைந்தன.

<u>பயிர்கள் சேதம்</u>

திருவாரூர் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் மழை பெய்ததால் கொட்டாரக்குடி, மேலஅனக்குடி, கமலாபுரம் உள்ளிட்ட இடங்களில் பயிரிடப்பட்டிருந்த சம்பா பயிர்கள் சாய்ந்து சேதம் அடைந்து இருந்தன. சில வயல்களில் தண்ணீர் தேங்கி இருந்தது. திருவாரூர் பஸ் நிலையம், உழவர் சந்தை உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் குளம்போல் தேங்கி நின்று வாகன ஓட்டிகளை சிரமப்படுத்தியது.

திருவாரூர்–நாகை மெயின் சாலையில் உள்ள கே.டி.ஆர். நகர் குடியிருப்பு பகுதியில் மழை வெள்ளம் சூழ்ந்தது. இதேபோல் திருவாரூர் ரெயில்வே கீழ்ப்பாலத்தில் தேங்கி நின்ற மழை வெள்ளம் உடனடியாக மோட்டார் மூலம் வெளியேற்றப்பட்டது.

<u>மழை நிலவரம்</u>

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் திருவாரூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக முத்துப்பேட்டை பகுதியில் 69 மில்லி மீட்டர் மழை பதிவானது. மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டர் அளவுகளில் வருமாறு:–

திருவாரூர்:– 61, திருத்துறைப்பூண்டி:– 53, மன்னார்குடி:– 34, நன்னிலம்:– 20, பாண்டவையாறு தலைப்பு:– 19, நீடாமங்கலம்:– 18, வலங்கைமான்:– 17, குடவாசல்:– 10.

நேற்று காலை நிலவரப்படி மாவட்டத்தில் 302 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மாவட்டம் முழுவதும் சராசரியாக 34 மில்லி மீட்டர் மழை பதிவாகியது.

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

ஊட்டி தோட்டக்கலை இணை இயக்குனர் (பொறுப்பு) மணி விடுத்து உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:– நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 20–ந் தேதி காலை 11 மணிக்கு நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமையில் நடைபெற உள்ளது. நீலகிரி மாவட்ட விவசாயிகள் விவசாயம் சம்பந்தப்பட்ட குறைகள் ஏதேனும் இருப்பின் தோட்டக் கலை இணை இயக்குனர், தபால் பெட்டி எண்.72, ஊட்டி–1 என்ற அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

விவசாயிகள் பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து தங்கள் மற்றும் நீர்ப்பாசனம், இடு பொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டும் மேற்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நீலகிரி மாவட்ட கலெக்டரால் கேட்டு கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**காற்றழுத்த தாழ்வு நிலை தீவிரம் அடைந்ததால் நாகையில் தொடர்மழை;**

**விவசாயிகள் மகிழ்ச்சி கருவாடு உற்பத்தி பாதிப்பு**



நாகப்பட்டினம்,

காற்றழுத்த தாழ்வுநிலை தீவிரம் அடைந்ததால் நாகையில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கருவாடு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

<u>வடகிழக்கு பருவமழை</u>

தமிழகத்தில் தற்போது வடகிழக்கு பருவ மழைக்காலம் நடைபெற்று வருகிறது. இந்தநிலையில் தமிழ்நாட்டுக்கு தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வுநிலை தீவிரமடைந்து காற்றழுத்த தாழ்வு பகுதியாக உருவாகி உள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பலத்த மழை முதல் மிதமான மழை பெய்து வருகிறது. நாகை மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதனால் நாகையில் லேசான சாரல் மழையாக பெய்தது. நேற்றுமுன்தினம் இரவு சுமார் 8.30 மணியளவில் குளிர் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இந்த மழை நேற்று காலை வரை விடிய, விடிய பலத்த மழையாக பெய்தது. பின்னர் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது சாரல் மழை பெய்தது.

<u>பள்ளிகளுக்கு விடுமுறை</u>

பலத்த மழையால் நாகை மாவட்டத்தில் உள்ள மீன்பிடித் தளம், கருவாடு உலர வைக்கும் தளம் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது. இதனால் கருவாடு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. நாகையில் கடல் சீற்றத்துடன் காணப்பட்டது. இந்த கடல் சீற்றத்தையும் பொருட்படுத்தாமல் மீனவர்கள் வழக்கம்போல் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையால் நாகையில் உள்ள முக்கிய சாலைகளில் மழைநீர் ஆறுபோல ஓடியது. நாகையில் பாதாள சாக்கடைத்திட்ட பணியின் போது தோண்டப்பட்டுள்ள பள்ளங்களில் மழைநீர் தேங்கி குளம்போல் காட்சியளிப்பதால் வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமப்பட்டனர். இந்த தொடர் மழையால் நேற்று நாகை மாவட்டத்தில் அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவித்து நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி உத்தரவிட்டார். இதனால் சாலைகளில் பள்ளி மாணவ– மாணவிகளின் கூட்டம் இல்லை. பள்ளிகளும் வெறிச்சோடி காணப்பட்டது.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

நாகை மாவட்டத்தில் தற்போது விவசாயிகள் 1 லட்சத்து 14 ஆயிரத்து 862 ஏக்கர் பரப்பளவில் சம்பா நேரடி நெல் விதைப்பு, நடவு மற்றும் திருந்திய நெல் சாகுபடி செய்து வருகின்றனர். எனவே தற்போது பெய்து வரும் இந்த மழை சம்பா சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து தமிழகத்துக்கு தேவையான தண்ணீர் வராததால் கவலையில் இருந்த விவசாயிகளுக்கு இந்த மழை பெரிதும் உதவியாக உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>மழை அளவு</u>நாகை மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை அதிகபட்சமாக திருப்பூண்டியில் 75.50 மி.மீட்டர் மழையும், குறைந்த பட்சமாக சீர்காழியில் 1 மி.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது. மேலும் மற்ற இடங்களில் பெய்த மழை அளவு வருமாறு:– (மில்லி மீட்டரில்)

தலைஞாயிறு – 66.60, நாகப்பட்டினம் – 57, வேதாரண்யம் – 53.60

மயிலாடுதுறை – 43.60, தரங்கம்பாடி – 18,

இது சராசரியாக 35.03 மி.மீட்டர் மழை அளவாகும்.

**தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை; பள்ளிகளுக்கு விடுமுறை ஒரத்தநாட்டில் அதிகபட்சமாக 46 மில்லிமீட்டர் பெய்தது**



தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. இதனால் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. ஒரத்தநாட்டில் அதிகபட்சமாக 46 மில்லி மீட்டர் மழை பெய்தது.

<u>வடகிழக்குப்பருவமழை</u>

தமிழகத்தில் தற்போது வடகிழக்குப்பருவமழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த 2 நாட்களாக தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்திலும் கடந்த 2 நாட்களாக மழை பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் மழை இன்றி காலையில் வெயில் காணப்பட்டது. இந்த நிலையில் மதியம் மழை பெய்தது. பின்னர் மழை இன்றி காணப்பட்டது. நேற்று அதிகாலை முதல் மழை பெய்து வருகிறது. நேற்று காலை முதல் இடைவிடாது தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்தது. மதியத்திற்கு பிறகு மழை இன்றி காணப்பட்டது.

<u>பள்ளிகளுக்கு விடுமுறை</u>

இதனால் நகரில் எங்கு பார்த்தாலும் சாலைகளில் மழைநீர் தேங்கி காணப்பட்டது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி காணப்பட்டது. தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது.

நேற்று காலை முதல் இடைவிடாது தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்ததால் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை விடப்பட்டது.

<u>மழைஅளவு</u>தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழைஅளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

அதிராம்பட்டினம் 40.5, கும்பகோணம் 3.6, திருவிடைமருதூர் 2, நெய்வாசல் தென்பாதி 22.4, கல்லணை 3.8, திருக்காட்டுப்பள்ளி 3.6, திருவையாறு 5, தஞ்சாவூர் 10.4, பூதலூர் 18.6, வெட்டிக்காடு 26.6, ஈச்சன்விடுதி 30.2, பேராவூரணி 30.2, ஒரத்தநாடு 46.7, மதுக்கூர் 41.2, பட்டுக்கோட்டை 47, குருங்குளம் 19, வல்லம் 8, ஆலக்குடி 26.4., கீழணை 1.

**நாமக்கல் மாவட்டத்தில் பரவலாக சாரல்மழை மோகனூரில் 8 மி.மீட்டர் பதிவு**



நாமக்கல், –

வங்க கடலில் எழுந்துள்ள காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக நாமக்கல் மாவட்டத்தில் பரவலாக சாரல்மழை பெய்து வருகிறது. நாமக்கல் நகரிலும் நேற்று முன்தினம் இரவு சாரல்மழை பெய்தது. நேற்று காலை முதல் மாலை வரை வானம் மப்பும், மந்தாரமுமாக காட்சி அளித்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் மி.மீட்டரில் வருமாறு:–

மோகனூர்–8, பரமத்திவேலூர்–6.2, நாமக்கல்–3.1, எருமப்பட்டி–2, மங்களபுரம்–1.6, குமாரபாளையம்–0.6. மாவட்டத்தின் மொத்த மழை அளவு 36.9 டிகிரி ஆகும்.

**சுனாமியால் நொச்சிநகரில் வீடுகளை இழந்தோருக்கு பொங்கல் பரிசாக 628 புதிய குடியிருப்புகள் வழங்க முடிவு மீனவர்கள் மகிழ்ச்சி**

சென்னை

சென்னை நொச்சிநகரில் சுனாமியில் வீடுகளை இழந்தோருக்கு, உலக வங்கி உதவியுடன் ரூ.45 கோடி மதிப்பில் கட்டப்பட்ட 628 குடியிருப்புகள் 2014–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொங்கல் பரிசாக உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

<u>நொச்சிநகர்</u>

தமிழகத்தில் கடந்த 2004–ம் ஆண்டு டிசம்பர் 26–ந்தேதி ஏற்பட்ட சுனாமி பேரலையில் மாநிலம் முழுவதும் உள்ள கடற்கரை கிராமங்கள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக சென்னை கலங்கரை விளக்கம் அருகில் உள்ள நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை உள்ள மீனவ பகுதிகள் மிகவும் பாதிப்படைந்தன.

கடற்கரை ஓரத்தில் இருந்த குடிசை வீடுகள் அடித்து செல்லப்பட்டது. ஒரு சில வீடுகள் சுனாமியில் பெருத்த சேதமடைந்தது. இதைத்தொடர்ந்து சுனாமியில் வீடுகளை இழந்த மீனவர்களுக்கு உலக வங்கி உதவியுடன் ரூ.45.39 கோடி மதிப்பில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் 2006–ம் ஆண்டு புது குடியிருப்புகள் கட்டும் பணியை தொடங்கியது.

<u>628 வீடுகள்</u>

அதன்படி, ஏ, பி, சி, டி, ஈ என 5 பிளாக்குகளாக ஒவ்வொரு கட்டிடமும் பிரிக்கப்பட்டு, தலா 4 அடுக்குமாடிகளுடன் மொத்தம் 628 வீடுகள் நொச்சி நகரில் கடந்த 2011–ம் ஆண்டு இறுதியில் கட்டி முடிக்கப்பட்டது. இவை ஒவ்வொன்றும் 360 சதுர அடியில் சமையல் அறையுடன் கூடிய பிராதான அறை, படுக்கை அறை, கழிப்பறை மற்றும் பால்கனி வசதியுடன் கட்டப்பட்டன. அத்துடன் குடியிருப்பில் குழந்தைகளுக்கான விளையாட்டு திடல், பூங்கா, 30 சிறு சிறு கடைகளும்

அமைக்கப்பட்டுள்ளது. எலக்ட்ரிக் வேலைகள், வர்ணம் பூசும் பணி, குடிநீர் இணைப்பு, கழிவு நீர் இணைப்பு போன்ற அனைத்து பணிகளும் முடிவடைந்தும் தமிழ்நாடு குடிசை வாரியத்தின் நொச்சிநகர் குடியிருப்பு கடந்த 2 ஆண்டுகளாக பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் இருந்து வருகிறது.

இதை கண்டித்து மீனவர்களுக்கு உடனடியாக சுனாமி குடியிருப்பை வழங்கக்கோரி பல்வேறு போராட்டங்களையும் நடத்தினர். எனினும் இதுவரை கட்டிடம் பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் இருந்து வருகிறது.

<u>பாழடைந்த பங்களாவாக...</u>

நொச்சிநகர் குடியிருப்பு கடந்த 2 ஆண்டுகளாகியும் திறக்கப்படாமல் உள்ளதால், பல கோடி ரூபாயில் சகல வசதிகளுடன் கட்டப்பட்ட கட்டிடங்கள் தூசிபடித்து பாழடைந்த பங்களா போன்று மாறி வருகிறது.

ஜன்னல், கதவுகள் போன்ற மரச்சாமான்களை கரையான்கள் அரித்து வருகின்றன. இரவு நேரங்களில் சமூக விரோத செயல்களும் நடந்து வருகிறது.

<u>பொங்கல் பரிசு</u>

இதுகுறித்து குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் கூறியதாவது:–

நொச்சிநகரில் 628 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்ட உடன் உரிய பயனாளிகளிடம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அப்போது பயனாளிகளிடம் ஒரு மித்த கருத்து ஏற்படாமல் இருந்ததால் வீடுகளை ஒப்படைப்பது தள்ளிக்கொண்டே போனது.

அத்துடன் முறையான ஒத்துழைப்பு இல்லாததால் நொச்சிக்குப்பத்தில் 534 வீடுகள், சீனிவாசபுரத்தில் 1,356 வீடுகளும், டொம்மிகுப்பத்தில் 584 வீடுகள் கட்டும் பணியும் தடைப்பட்டது. இதனால் மாற்று பணிகளிலும் கவனம் செலுத்த முடியாமல் இருந்து வந்தது. ஆனால் தற்போது தமிழக அரசின் தீவிர முயற்சியால் பயனாளிகளிடம் பேசி, 2014–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொங்கல் பரிசாக 628 வீடுகளையும், அதன் அருகில் கட்டப்பட்ட 30 கடைகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.